விலை: 50.00 பக்கங்கள் : 24

# வலம்புரி
Valampurii

சங்கு 25 ஒலி 328 வள்ளுவர் ஆண்டு 2055
ஐப்பசி 25 திங்கட்கிழமை (11.11.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




# கைதிகளை விடுவிப்போம்
# காணிகளைத் தருவோம்

## யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி அநுர உறுதி

*(யாழ்ப்பாணம்)* வட பகுதி மக்களுக்கு எமது ஆட்சியில் நம்பிக்கை உண்டு. நீங்கள் சுதந்திரமாக வாழக்கூடிய நிலையை வட மாகாணத்தில் ஏற்படுத்திக் கொடுப்போம்.

இவ்வாறு யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்து பாசையூரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றிய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார். *(23ஆம் பக்கம் பார்க்க)*



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## பாராளுமன்ற தேர்தல் - 2024

### இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம் (யாழ், கிளிநொச்சி)

**எமது** நிலத்தில் / பலத்தில் எம்மை நாமே ஆள்வோம்



9

**சந்திரலிங்கம் சுகிர்தன் (B.Com)**

முன்னாள் மாகாண சபை உறுப்பினர்

பணிப்பாளர் வடக்கு - கிழக்கு மறுவாழ்வு அமைப்பு (NERO)

தலைவர் - மதுபோதைக்கு எதிரான இயக்கம்

X 9

அடையாளம் மாறாத

அரசியல் மாற்றம்

(C-213)

## 8 திசையும் சூரியன்

தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF)

### வீ.ஆனந்தசங்கரி



வெளிப்படையான பேச்சு

அரசியல் நேர்மை

பதவிக்கு விலை போகாமை

X 1 2 3 4 5 6 7 8 9

(C-212)

## பாராளுமன்றத் தேர்தல் - 2024

### வன்னி மாவட்டம்



**வன்னி வாக்காளப் பெருமக்களே!**

இதுவரை எமது இனம் சுமந்த வலிகளையும் சந்தித்த இழப்புக்களையும் அதற்காக கொடுத்த விலைகளையும் என்றும் நான் மறந்துவிடப் போவதில்லை. எதையும் பாராமுகமாக கடந்து செல்ல மாட்டேன். அனைத்து விடயங்களிலும் எப்போதும் நான் விசுவாசமாகவும் உண்மையாகவும் இருந்து செயற்படுவேன்.

**எமது மக்களுடன் நான்:**

**கலாநிதி**

**நவரத்தினம் ரவீந்திரகுமாரன்**

முன்னாள் பொருளியல் சிரேஸ்ட விரிவுரையாளர்

[கொழும்புப் பல்கலைக்கழகம், வவுனியாப் பல்கலைக்கழகம்]

**வன்னி மண்ணின் வளமான எதிர்காலத்திற்காக உங்களுடன் நான்...**

X 5

(C-203)

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

## பாராளுமன்ற தேர்தல் - 2024

### வன்னி தேர்தல் மாவட்டம்

"அன்றும் இன்றும் என்றும் தடம் மாறாத தமிழ்த் தேசிய பயணத்தில்"

8

**வல்லிபுரம் கமலேஸ்வரன்**

(முன்னாள் பிரதி அவைத் தலைவர், வடமாகாண சபை)

இணைப்பொருளாளர் - இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி



இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்துக்கும் வன்னியின் எல்லைக் காவலனுக்கும் உங்கள் அமோக வாக்குகளை அளித்து வெற்றி பெறச் செய்வீர்...!

X 8

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

(C-204)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றத் தேர்தல் - 2024

யாழ்ப்பாணம்,
கிளிநொச்சி மாவட்டம்




உரிமைக்கான போராட்டக் களங்களில்....


சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில்




யாழ் பல்கலைக்கழக முள்ளிவாய்க்கால் தூபி உடைக்கப்பட்டபோது


தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டத்தில்


ஜனாதிபதியின் வருகைக்கெதிரான ஆர்ப்பாட்டத்தில் பொலிசாரினால் கைது செய்யப்பட்டபோது



பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணியில்

தமிழரின் உரிமைக்காக
ஐக்கிய நாடுகள் சபையில்...















**கனகரட்ணம் சுகாஷ்** ஆகிய நான்,

தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைசார் அரசியல் பயணத்தில் கொள்கை தவறாது என்றும் மாவீரர்கள் காட்டிய பாதையில் நேர்மையுடன் பயணிப்பேன் என இத்தால் உறுதியளிக்கின்றேன். இப்பயணத்தில் நான் தடம்மாறினால் எந்நேரமும் எவ்விடத்திலும் என்னைக் கேள்வி கேட்கவும், ஏன் தூக்கி வீசவும் உங்களுக்குப் பூரண உரிமையும் அதிகாரமும் உண்டு.

தொ.இல: 077 936 1354



X 1

கனகரட்ணம்,
## சுகாஷ்
(சட்டத்தரணி)

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி
## அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்

(சி-196)

**இலக்கு ஒன்றே இனத்தின் விடுதலை!**



# வீண்போகாது உங்கள் கனவும் தமிழ்த்தேசியப்பற்றும்



தமிழ்த்தேசியத்தின் எழுச்சிக்கனவுகளுடன் இறுதிவரை பயணித்த என் தந்தையின் உறுதியான அடிச்சுவட்டில் நான் சுயநலமற்று தன்னலம் பாராமல் உங்களுடன் இறுகக் கைகோர்த்து இறுதிவரை பயணிப்பேன் இது என் வாக்குறுதி மட்டுமல்ல மனஉறுதியும் கூட!

அன்புடன்
வ.பார்த்திபன்

**சின்னத்துரை வரதராஜன்**
ஈழத்தின் பிரபல பொருளியல் ஆசிரியர்

# யாழ்.கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
# தமிழ் மக்கள் கூட்டணி





X



## வரதராஜன் 8 பார்த்திபன்
முன்னாள் உறுப்பினர், யாழ்.மாநகர சபை

## மான் இற்கு வாக்களிப்போம்

## 9 விஸ்வலிங்கம் மணிவண்ணன்
முன்னாள் முதல்வர், முதன்மை வேட்பாளர்

(சி-195)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சிளம் குழந்தையை தூக்கி எறிந்து சுன்னாகம் பொலிஸார் அட்டகாசம்



(சுன்னாகம்)

பச்சிளம் குழந்தையை தூக்கி வீசி, இளம் தாயார் மீதும் அவரது கணவர் மீதும் சுன்னாகம் பொலிஸார் மூர்க்கத்தனமாக தாக்குதல் நடாத்தியுள்ளதாக பாதிக்கப்பட்டவர்க்கம் குற்றம் சாட்டியுள்ளனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ்ப்பாணம் சுன்னாகம் பகுதியில் தமது வாகனத்தில் குடும்பத்தினர் பயணித்துக்கொண்டிருந்த வேளை அவர்களது வாகனத்தை மோட்டார் சைக்கிளில் முந்தி சென்றவர்கள் வாகனத்திற்கு முன்பாக தடுமாறி விழுந்து விபத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

அதனை அடுத்து சம்பவ இடத்திற்கு சிவில் உடையில் வந்த பொலிஸார், வாகன சாரதியுடன் முரண்பட்டு, அவரை தாக்கியுள்ளனர்.

அதன்போது வாகனத்தில் இருந்த அவரது மனைவி இரண்டு மாதங்களேயான தனது குழந்தையுடன் இறங்கி கணவன் மீது தாக்குதல் நடாத்தியவர்களை தடுக்க முற்பட்ட வேளை அவரது கையில் இருந்த குழந்தையை பறித்து எறிந்து தாயையும் தாக்கியுள்ளனர்.

அதனை அடுத்து சம்பவ இடத்தில் பொதுமக்கள் கூடியதும், சீருடையில் வந்த பொலிஸார் வாகனத்தையும் வாகனத்தில் இருந்தவர்களையும் வாகனத்துடன் பொலிஸ் நிலையம் அழைத்துச்சென்று, தாக்குதலுக்கு இலக்கானவர்களை கைது செய்தனர்.

இதேவேளை சம்பவ இடத்திற்கு சென்ற சட்டத்தரணிமணிவண்ணன் மற்றும் பார்த்தீபன் ஆகியோர் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு ஆதரவாக நின்றிருந்தனர்.

பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு ஆதரவாக பொலிஸ் நிலையம் முன்பாக நின்ற மக்களை கலைந்து செல்லுமாறு பொலிஸார் பணித்து, மக்களை அங்கிருந்து விரட்ட முனைந்தனர்.

இதேவேளை, மேற்படி சம்பவம் தொடர்பில் தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட வேட்பாளர் மருத்துவர் பவானந்தராஜா பிரதி பொலிஸ் மா அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்ட வந்ததை யடுத்து குற்றம் இழைத்த பொலிஸார் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென உத்தரவாதம் அளிக்கப்பட்டது. (ந-7)






இந்தியாவின் மண்டபம் முகாமிலிருந்து

# படகு மூலம் 9 பேர் தாயகம் திரும்பினர்

இந்தியா - தமிழகம் மண்டபம் ஏதிலிகள் முகாமிலிருந்து 9 பேர் படகு மூலம் நேற்று முன் தினம் மாலை நெடுந்தீவை வந்தடைந்துள்ளனர்.

நெடுந்தீவு மேற்கு பனங்காணிப் பகுதியில் படகு மூலம் நேற்று முன்தினம் மாலை வந்தடைந்தவர்கள் திருலிங்கபுரம் பகுதியில் உள்ள ஆலயத்தில் தங்கவைக்கப்பட்டு பின்னர் அனைவரும் நெடுந்தீவு பிரதேச வைத்தியசாலையில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

அதன் பின்னர் நெடுந்தீவு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் அனைவரும் மாவிலித்துறைப் பகுதியில் உள்ள தனியார் ஒருவரின் வீட்டில் தங்க வைக்கப்பட்டனர்.

திருகோணமலை, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த 3 ஆண்கள், 3 பெண்கள், 3 சிறுவர்கள் என 9 பேர் நேற்று முன்தினம் காலை தமிழகத்தில் இருந்து புறப்பட்டு மாலை நெடுந்தீவை வந்தடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த ஒன்பது பேரையும் தற்போது காங்கேசன்துறை கடற்படை முகாமில் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

கடற்படை விசாரணைகள் நிறைவடைந்த பின்னர் நெடுந்தீவு பொலிஸாரிடம் அவர்கள் ஒப்படைக்கப்பட்டனர். (ந-7,33)

# பொலிஸார் மீது விசாரணை சட்டநடவடிக்கை எடுக்கப்படும்

## யாழ். உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்

(சுன்னாகம்)

சுன்னாகம் பகுதியில் இடம்பெற்ற விபத்து சம்பவத்தினை தொடர்ந்து பொலிஸார் நடந்து கொண்ட விடயம் தொடர்பில் விசேட பொலிஸ் குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக யாழ்ப்பாண பிராந்திய உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் எம்.எஸ்.எம் ஜருள் தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப் பாண பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம் எஸ் எம் ஜருள் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது,

காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகஸ்தர், பயணித்த மோட்டார் சைக்கிளும் வான் ஒன்றும் காங்கேசன்துறை வீதியில் சுன்னாகம் சந்திக்கு அருகில் விபத்துக்குள்ளானது.

விபத்தினை அடுத்து, வாகனம் அவ்விடத்தில் இருந்து தப்பி செல்ல முற்பட்ட வேளை சிவில் உடையில் நின்ற பொலிஸார் வாகனத்தை வழிமறித்து, சாரதியின் சாரதி அனுமதிப்பத்திரத்தினை கேட்டுள்ளனர்.

சிவில் உடையில் உள்ளவர்களுக்கு தான் சாரதி அனுமதிப்பத்திரத்தினை தரமாட்டேன் என கூறி தர்க்கப்பட்ட நிலையில் இரு தரப்பினரும் கைகலப்பில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தின் போது விபத்தில் காயமடைந்த பொலிஸ் உத்தியோகஸ்தரும், கைகலப்பில் காயமடைந்த பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவரும் தெல்லிப்பளை வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் யாழ். மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் காளிங்க ஜெயசிங்க அவர்களின் உத்தரவில் விசேட பொலிஸ் குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

விசாரணைகளில் குற்றவியல் குற்றங்கள் கண்டறியப்பட்டால், அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அதேவேளை பொலிஸாரின் நடவடிக்கைகள் குறித்து ஒழுக்காற்று நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

சம்பவம் தொடர்பில் பூரண விசாரணைகளை முன்னெடுக்குமாறு பொலிஸ் மா அதிபரும் அறிவுறுத்தியுள்ளார். நிச்சயமாக பக்க சார்பற்ற விசாரணைகளை முன்னெடுத்து நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார். (ந-7)

# பிரிக்ஸ் அமைப்பில் இணையுமா இலங்கை

முடிவு ரஷ்யாவின் கரங்களில்

பிரிக்ஸ் அமைப்பில் இணைவதற்கான இலங்கையின் விண்ணப்பம் ஏனைய நாடுகளுடன் கலந்தாலோசிக்கப்பட்ட பின் பரிசீலிக்கப்படும் என ரஷ்ய தூதரகம் தெரிவித்துள்ளது.

பிரிக்ஸ் அமைப்பின் தலைவர் என்ற வகையில் ரஷ்யா, இலங்கையின் விண்ணப்பத்தை வரவேற்பதாகவும், அது நிராகரிக்கப்பட்டதாக வெளியான செய்திகள் தவறானவை என்றும் தூதரகம் தெரிவித்துள்ளது.

ரஷ்யாவில் நடைபெற்ற சமீபத்திய உச்சிமாநாட்டில், பிரிக்ஸ் அமைப்பில் சேருவதற்கான கோரிக்கையை இலங்கை பதிவு செய்தது. வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் இலங்கைக்கு ஆதரவளிக்குமாறு உறுப்பு நாடுகளிடம் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7)



பாராளுமன்றத் தேர்தல் தொடர்பாக குழுக்களுக்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலகர்களுடனான முன்னாயத்தக் கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பாராளுமன்ற தேர்தல் - 2024

யாழ்.கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்



மக்களோடு நாம்
மக்களுக்காக நாம்

தமிழ் தேசியத்தின்
சின்னம் – சங்கு



6

பாலச்சந்திரன்
கஜதீபன்
(ஆசிரியர்,முன்னாள் மகாகண சபை உறுப்பினர்)

5

தருமலிங்கம்
சித்தார்த்தன்
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)
(சி-200)

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி (தமிழ் தேசிய கூட்டமைப்பு)

## பாராளுமன்ற தேர்தல் 2024

யாழ் கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்

**உண்மை,நேர்மை,அர்ப்பணிப்பு
ஆளுமை,செயல்திறன்
மாற்றங்களை நிகழ்த்தும்
ஆற்றல்.**

முதன்மை வேட்பாளர்
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
முருகேசு சந்திரகுமார்

ஐக்கிய
மக்கள்
சக்தி





8

(076)

1 2 3 4 5 6 7 8 9

# பாராளுமன்றத் தேர்தல் - 2024

யாழ். கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்

*தாயகம், தேசியம், சுயநிர்ணயம்*

- தமிழ்த் தேசம், இறைமை, சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான தீர்வை வலியுறுத்தல்!
- இனப்படுகொலைக்கான சர்வதேச நீதி, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதியை வலியுறுத்தல்...!
- பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் மற்றும் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தல்..!
- கடற்தொழில், விவசாயம் உள்ளிட்ட தமிழர் தேசத்தின் நிலையான அபிவிருத்திக்காக உழைத்தல்...!
- தமிழர் தாயகத்தை சிங்கள பௌத்த மயமாக்குவதை எதிர்த்தல்..!
- இனப்பரம்பலை மாற்றியமைக்கும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங் களை எதிர்த்தல்...!
- அரச இயந்திரங்களின் ஊடாக மேற்கொள்ளப்படும் ஆக்கிரமிப் புகளை எதிர்த்தல்...!
- வன்முறை, போதைக்குள் சிக்குண்டுள்ள எமது இளைஞர்களை மீட்டு அவர்களை தமிழர் தேசத்தைக் கட்டியெழுப்பும் சக்தியாக மாற்ற செயலாற்றுதல்...!



கஜேந்திரகுமார்
பொன்னம்பலம்
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
தலைவர்,
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி.
2

செல்வராசா
கஜேந்திரன்
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
பொதுச் செயலாளர்,
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி.
9

5

நடராஜர் காண்டீபன் - சட்டத்தரணி

(சி-198)



அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

இரு தேசங்கள் ஒரு நாடு

1 2 3 4 5 6 7 8 9 ஒற்றைத் தலைமையில் ஓரணியாவோம்!

சைக்கிள் சின்னத்திற்கு புள்ளடி இட்டு உங்கள் விருப்பு இலக்கங்களிற்கும் புள்ளடிகளை இடவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றத் தேர்தல்-2024

## வாசகர்களின் கருத்துக் கணிப்பு

- யாழ்ப்பாணம்- கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
- வன்னித் தேர்தல் மாவட்டம்

1. மேற்குறித்த இரண்டு தேர்தல் மாவட்டங்களிலும் கட்சிகள் அல்லது சுயேட்சைக்குழுக்கள் பெற்றுக் கொள்ளும் ஆசனங்கள்.

2. பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்களின் பெயர்களை தனித்தனி தேர்தல் மாவட்டங்களாக (யாழ்ப்பாணம், வன்னி) குறிப்பிட்டு வலம்புரி நாளிதழின் **076 097 3128** எனும் வட்சப் இலக்கத்திற்கு அனுப்பி வையுங்கள்.

**நிபந்தனைகள்**

கருத்துக் கணிப்பை அனுப்புபவர்கள்
**முழுப்பெயர். முகவரி.**
**தே.அ.அ.இல.**
**தொ.பே.இல**
**பாஸ்போர்ட் அளவிலான புகைப்படம்**
ஆகிய விபரங்களை உள்ளடக்குவதுடன் ஒருவர் ஒரே மாவட்டத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக் கணிப்புக்களை முன்வைக்க முடியாது என்பதையும் 16 வயதிற்கு மேற்பட்ட இருபாலாரும் இக் கருத்துக்கணிப்பில் பங்குபற்ற முடியும் என்பதையும் கவனத்தில் கொள்க.

**முக்கிய குறிப்பு**

மிகச் சரியான கணிப்பை அனுப்பி வைத்தவர்களின் பெயர் விபரம் அவர்களின் புகைப்படங்களுடன் வலம்புரியில் வெளியிடப்படும்.

மிகச் சரியான கணிப்பை வெளிப்படுத்தியவர்களில் குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள் தீர்மானிக்கப்படுவர்.

கருத்துக் கணிப்பை அனுப்புவதற்கான இறுதிநாள் **13.11.2024** நள்ளிரவு 12 மணி

**நிர்வாகம், வலம்புரி.**

# தமிழர் தேசத்தை அங்கீகரிப்பதே பிரச்சினைக்கான தீர்வாகும்

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

(யாழ்ப்பாணம்)

சமஷ்டியையே ஏற்க முடியாத பேரினவாத அரசு இந்த நாட்டை முன் னேற்றப்போவது கிடையாது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வேட்பாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார். அவர் மேலும் தெரி விக்கையில் சமஷ்டி என்பது பிரிவினை வாதமோ தனித்துப்போவதோ அல்ல; பல்லின சமூகங்களை ஒற்றுமையுடனும் இன நல்லிணக்கத்துடனும் நிர்வகித்து முன்னேற்றம் நோக்கி அழைத்துச் செல்லும் முறைமை எனும் உண்மையை சிங்களப் பேரினவாதம் புரிந்து கொண்டு



தமிழர் தேசம் அங்கீகரிக்கப்படும் போதே நாடு முன்னேறும் என அவர் தெரிவித்தார். (நி-8)

# ஐ.எம்.எப் பிரதிநிதிகள் இலங்கை விஜயம்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று அடுத்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள விரிவான கடன் வசதியின் கீழ் மூன்றாவது மீளாய்வை மேற்கொள்வதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் சிரேஷ்ட தூதுக்குழுவின் பிரதானி பீட்டர் ப்ரூவர் தலைமையிலான குழுவொன்று நாட்டுக்கு விஜயம் செய்யவுள்ளது.

இந்த மீளாய்வின் பின்னர் சர்வதேச நாணய நிதியம் அடுத்த கடன் தவணையை இலங்கைக்கு வழங்கவுள்ளது.

இதன்படி அடுத்த வாரம் நாட்டுக்கு வரும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு தற்போதைய அரசாங்கத்தின் பொருளாதார கொள்கைகள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும்- சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்துவது மற்றும் இந்த நாட்டில் பொருளாதார சீர்திருத்த வேலைத்திட்டத்தின் கீழ் அண்மைக்காலமாக ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்தும் ஆராயப்படவுள்ளது. (நி-8)


வளமான வாழ்வுக்கு வழிகாட்டி...
நம் திசைகாட்டி
ජාතික ජන බලවේගය
தேசிய மக்கள் சக்தி
JATHIKA JANA BALAWEGAYA (NPP)
X



02 X கருணாநாதன் இளங்குமரன்
(முதன்மை வேட்பாளர்)

03



காராளசிங்கம் பிரகாஷ்

05



தேவராசா தஜீவன்

யாழ்-கிளிநொச்சி தேர்தல் தொகுதி
சிந்தித்து வாக்களியுங்கள்
(சி-183)



யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
பாராளுமன்ற தேர்தல் 2024

ஊஞ்சல் சின்னம்
X 4
சுயேச்சைக் குழு -2



நேரமையான வினைத்திறன்மிக்க அரசியலுக்கு!
இளைஞர்களின் வருகையை ஆதரிப்போம்!

E.S.P. நாகரத்தினம்
கமலரூபன்
சட்டத்தரணி, இளம் தொழில் முயற்சியாளர்
LL.B (Hons), BA (Economics) (University of Colombo)

இரண்டு ஆண்டு கால செயல்திட்டம்

- எமது தமிழர் பரப்பான சுயத்திலும் புலத்திலும் பலமான கட்டமைப்பினை உருவாக்குதல்.
- யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி தேர்தல் மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்படும் ஆறு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கிடையில், எவ்வித கட்சி வேறுபாடுகளின்றி, ஒருமித்த நிலைப்பாட்டை ஏற்படுத்தி, அரசியல் தீர்வு மற்றும் பொருளாதார மேம்பாடு தொடர்பான பொதுத்தீர்மானத்தை நிறைவேற்றுதல்.
- இளைஞர் வேலைவாய்ப்புத்திட்டம்.
- அறிவோம் ஆழ்வோம் செயல்திட்டம்.
- போக்குவரத்து மேம்பாட்டுத்திட்டம்.

2030ஆம் ஆண்டை நோக்கிய செயல்திட்டம்

- தமிழர் தரப்பில் பலமான கட்டமைப்பை உருவாக்கி நிலையான நீடித்த அரசியல் தீர்வு முன்னெடுப்புக்கள்.
- விவசாயம், மீன்பிடி, கைத்தொழில் மற்றும் சேவைத்துறையில் தன்னிறைவான பொருளாதார மேம்பாட்டுடன் கூடிய செயல்திட்ட முன்மொழிவுகள்.
- 2050ஆம் ஆண்டை நோக்கிய கிராமங்களின் எழுச்சியையும் நகரத்தை நவீனமயப்படுத்துவதற்கான செயல்திட்ட முன்மொழிவுகள்.

2050ஆம் ஆண்டை நோக்கிய செயல்திட்டம்

- விவசாயம், மீன்பிடி, கைத்தொழில் மற்றும் சேவைத்துறையில் தன்னிறைவடைதல்.
- இளைஞர்களின் இருப்பை பலப்படுத்தி ஒரு சமூக. பொருளாதார கட்டமைப்பை உருவாக்குதல்.
- வளமான அமைதியான தேசம் என்ற உயர்நிலையை எட்டுதல்.

"எமது இரண்டு வருட கால செயல்திட்ட முன்னேற்றங்களையும், 2030 மற்றும் 2050 ஆண்டுகளை நோக்கிய செயல்திட்ட முன்மொழிவுகளையும் 2026ஆம் ஆண்டு பொது மாநாட்டில் வெளியிடுவோம்!"

"வீழ்ந்தால் நான் மட்டும் வீழ்கிறேன்!
எழுந்தால் பலமான தமிழர் பரப்பு புதுவிடியலை நோக்கி பயணிக்கட்டும்.
(சி-190)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் மக்களின் நம்பிக்கைக்குரிய ஆளணி


**அங்கஜன் இராமநாதன்**
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், முன்னாள் விவசாய பிரதி அமைச்சர், முன்னாள் பாராளுமன்ற குழுக்களின் பிரதித்தவிசாளர்
1


**அய்னா சிறிசுதர்சன்**
முன்னாள் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்
2


**இராசையா இராஜசேகரம்**
ஓய்வுநிலை அதிபர் (SLPS 1), சமாதான நீதவான்
3


**குணசேகரன் பிறேம்காந்த்**
சமாதான நீதவான், மனித உரிமை செயற்பாட்டாளர்
4


**தில்லைநாதர் தங்கவேலு**
முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் - தென்மராட்சி
5


**பாலகிருஸ்ணன் முகுந்தன்**
யாழ் மாவட்ட உதைபந்தாட்ட பயிற்றுவிப்பாளர்
6


**றொபின்சன் அனுஜன்**
விளையாட்டுத்துறை பயிற்றுவிப்பாளர்
7


**வசந்தன் சுமதி**
தலைவி - சிக்கன கடன் உதவி கூட்டுறவு சங்கம், மட்டுவில்
8


**செந்திவேல் தமிழினியன்**
முன்னாள் நகரசபை உறுப்பினர் - வல்வெட்டித்துறை
9

X 1

வாக்களிப்பீர்
# தபால் பெட்டி
நம்பிக்கையின் சின்னம்

என் கனவு யாழ்
இருப்பியல்
வையத் தலைமை கொள்



(சி-194)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசியலில் வன்முறைக்கு இடமில்லை

## ஜனாதிபதி அநுர வலியுறுத்து

**(கொழும்பு)**

**கடந்த காலங்களில் பாரிய கொலைகளை நிகழ்த்திவிட்டுத் தலைமறைவாகியுள்ளவர்கள் தொடர்ந்தும் சுதந்திரமாகச் சுற்றித்திரிய இடமளிக்கப்பட மாட்டாது என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

அநுராதபுரத்தில் இடம்பெற்ற பிரசார கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசியல் களத்தில் ஒருபோதும் வன்முறையாளர்களுக்கு இடமளிக்கப்படமாட்டாது.

சிலருக்கு வேதனையளிக்கும் தீர்மானங்களும் எடுக்கப்படும். இதற்குப் பலமிக்கதொரு பாராளுமன்றம் அவசியமாகிறது.

அனுபவமிக்கவர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்புமாறு கூறுபவர்களும் புதிய முகங்களையே அனுப்ப வேண்டும்.



ஏனெனில், நாடு எதிர்வரும் 14 ஆம் திகதிக்குப் பிறகு புதிய திசையில் செல்ல காத்திருக்கிறது.

எமக்கு வாக்களிக்காதவர்களே இன்று தேங்காய் விலை அதிகரித்துள்ளதாகக் கூச்சலிடுகின்றனர்.

நாம் குறுகிய காலத்தில் நாட்டை சரியான பாதைக்கு இட்டுச் செல்வோம் என அவர்களுக்குக் கூற விரும்புகிறேன்.

தாஜுதீன், லசந்த, எக்னெலிகொடவை கொன்றவர்கள் தேடப்படுகின்றனர். அவர்களால் தொடர்ந்தும் சுதந்திரமாகச் சுற்றித்திரிய முடியாது. அவர்களை நிச்சயமாகச் சட்டத்தின் முன் நிறுத்துவோம்.

அதேநேரம், கடனுதவி அடிப்படையில் அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்த இந்தியா தற்போது நன்கொடையின் அடிப்படையில் பல திட்டங்களைமுன்னெடுப்பதற்கு இணங்கியுள்ளதாகவும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார். (நி-8)

# அன்னாசி விலை மேலும் உயரும்

(கொழும்பு)

நாட்டில் அன்னாசிப் பழத்தின் விலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி ஒரு கிலோ கிராம் எடையுடைய அன்னாசிப் பழத்தின் விலை 600 ரூபா என தெரிவிக்கப்படுகின்றது.

பண்டிகைக் காலத்தில் அன்னாசியின் விலை மேலும் உயர்வடையக் கூடும் என வர்த்தகர்கள் ஊகம் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, பேக்கரி மற்றும் உணவக பொருட்களின் விலையை குறைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-8)

# வாசிப்பு மாத நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யா/ஸ்ரீ புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரியின் தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை காலை 7.30 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி முதல்வர் சி. திரிகரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் யாழ். வலயக்கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.இராஜமோகன் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளவுள்ளார். (நி-8)


# INVITATION FOR BIDS(IFB)

## IFB NO:2024/04

### DEPARTMENT OF LOCAL GOVERMENT,NORTHERN PROVINCE
### VELANAI PRADESHIYA SABHA

1. The **Chairman, Local Authority Procurement Committee, on** behalf of the **Velanai Pradeshiya Sabha** now invites sealed bids from eligible and qualified bidders for the civil works as described below.

| No | Contract No | Contract Name | Source of Fund | Estimated Cost (Rs. Mn) | Required CIDA Grade & Specialty | Contract Period (Days) | Bid Validity Period | Bid Security Amount (Rs) | Bid Security Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | NP/14/41(18)/02/ CF/2024/09 | Improvement of Velanai Pradeshiya sabha head office | Council | 4.977 | C8 & C7 in Building Construction | 90 | 28.01.2025 | 49,000.00 | 25.02.2025 |
| 02 | NP/14/41(18)/02/ CF/2024/02 | Construction of Mandaitivu Veerapaththirar Kovil Veethy | Council | 1.19 | C8 & C9 in Highway Construction | 60 | 14.01.2025 | 11,900.00 | 11.02.2025 |
| 03 | NP/14/41(18)/02/ CF/2024/03 | Construction of allaippiddy Juvaniar church road | Council | 1.19 | C8 & C9 in Highway Construction | 60 | 14.01.2025 | 11,900.00 | 11.02.2025 |
| 04 | NP/14/41(18)/02/ PSDG/01/2024 | Renovation of Library at Mandaitivu | PSDG (SPECIAL) | 1.626 | C8 & C9 in Building Construction | 60 | 14.01.2025 | 16,000.00 | 11.02.2025 |

2. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty mentioned in Schedule for grade mentioned in the table above with the Construction Industry Development Authority (CIDA).
4. Qualification requirements to qualify for contract award are included in Section 4 (Qualification Information) and Section 5 (Bidding Data and Contract Data) in the Bidding Document.
5. Interested bidders may obtain further information from **Secretary, Velanai Pradeshiya Sabha, Vangalavady junction, Velanai. (T.P No: 021 221 1506, Fax No: 021 221 1506)** and inspect the bidding documents at **Velanai Pradeshiya Sabha, Vangalavady junction, Velanai** from **11-Nov-2024** until **25-Nov-2024** between **09:00 Hrs to 15:00 Hrs** on normal working days.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Secretary, Velanai Pradeshiya Sabha, Vangalavady junction, Velanai** from **11-Nov-2024** until **25-Nov-2024** between **09:00 Hrs to 15:00 Hrs** on normal working days upon payment of a non-refundable fee of **Rs.1,500.00**. The method of payment will be **by cash.**
7. Bids (Original and Copy) shall be delivered to **Chairman, Local Authority Procurement Committee, Velanai Pradeshiya Sabha, Vangalavady junction, Velanai** on or before **10:30** Hrs on **26-Nov-2024.** Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders representatives who choose to attend.
8. All bids shall be accompanied by a **Bid Security** as stated in the Table above.
9. The Pre-Bid Meeting will be held at **Velanai Pradeshiya Sabha, Vangalavady junction, Velanai** on **18th Nov-2024** at **11:00 hrs**, Interested Bidders may participate in this meeting their own expenses.

(C-1558)

**Chairman, Local Authority Procurement Committee (LAPC), Velanai Pradeshiya Sabha, Vangalavady junction, Velanai.**

**11.11.2024.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வந்த இந்திய கப்பல்



(கொழும்பு)

இந்திய கடற்படைக்கு சொந்தமான "ஐஎன்எஸ் வேலா" என்ற நீர்மூழ்கிக் கப்பல், உத்தியோகபூர்வ பயணமாக நேற்று நாட்டை வந்தடைந்துள்ளது.

கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த கப்பலுக்கு இலங்கை கடற்படையினர் கடற்படை மரபுகளுக்கு ஏற்ப வரவேற்பு அளித்தனர்.

நீர்மூழ்கிக் கப்பல் கொழும்பில் தங்கியிருக்கும் போது இரு கடற்படைகளுக்கும் இடையிலான நட்புறவை வலுப்படுத்தும் வகையில் இலங்கை கடற்படை ஏற்பாடு செய்யும் நடவடிக்கைகளில் அதன் குழுவினர் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

உத்தியோகபூர்வ பயணத்தை முடித்துக்கொண்டு, ஐஎன்எஸ் வேலா நாளை மறுதினம் இலங்கையிலிருந்து புறப்படும். (நி-8)

# 1ஆம் ஆண்டு நினைவுநாள் அழைப்பு



கடந்த 24.10.2024 செவ்வாய்க்கிழமை
அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

## அமரர். இராமு சுப்பிரமணியம்
(சின்னக்கிளி)

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுநாள்
இன்று 11.11.2024 திங்கட்கிழமை மதியம்
11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற
இருப்பதால் அத் தருணம் தாங்கள் தங்கள்
குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மா
சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்
தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும்
கலந்து கொள்ளும் வண்ணம்
அன்புடன் அழைக்கின்றோம்.

ஏழாலை தெற்கு,
மயிலங்காடு.

(சி-1560)

தகவல்
குடும்பத்தினர்.

# 04ஆம் ஆண்டு நினைவுதினம்

தாயின் மடியில்
–
1999
–
05
–
18



ஆண்டவன் மடியில்
–
2020
–
11
–
11

## அமரர்.லோகேஸ்வரன் பிரவீனன் (கபிலன்)

(யா/வயாவிளான் மத்திய கல்லூரி மாணவன் உயர் தரம் -2018)

என் உயிரணுவில் உதித்த மகனே
ஒரு போதும் என் கண்ணீரை விரும்பாத நீ
இன்று நான் கண்ணீர் விட்டுக் கதறியும்
கண்டு கொள்ளாமல் இருக்கிறாயே தம்பி கபிலன்

எம் அன்னையும் தந்தையும்
பெருமைப்படும் அளவிற்கு
உன் கல்வித் திறமையால்
உயரத்திற்குச் சென்றாயே
உன் கனவுகள் அடையும் முன்பே
இறைவன் உன்னை ஏன்
அழைத்தான் என்று
தெரியவில்லையே தம்பி கபிலன்

காலன் தன் வேலை தனை கடிதென
முடித்து விட்டான்
ஆனால் நீ மடிந்த செய்தி கேட்டு
மட்டில்லா துன்பம் கொண்டு
மண்மிசை புரள்கின்றோம்
வருடங்கள், நாட்கள் ஓடிக்கொண்டே
செல்கிறதே
உன் நினைவு ஒரு போதும்
எம்மைவிட்டு செல்லவில்லை
உன் வருகையை எதிர்பார்த்து
கண்ணீருடன் என் விழிகள்....

பூத்த கொடி பூக்கள் இன்றி தவிக்கின்றது
தம்பி கபிலன் எங்கள் வீட்டு செடியில்
பூத்து விடு தம்பி கபிலனே.

(சி-1557)

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.

உன் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, தம்பி, தங்கைமார்.

உ
திருச்சிற்றம்பலம்

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

கடந்த 14.10.2024 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவி

அமரர்.திருமதி.
## சிவபாக்கியம் ஞானஸ்கந்தன்
(மணிஅக்கா)



அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்
எதிர்வரும் *(13.11.2024)* புதன்கிழமை காலை *11.00* மணியளவில்எமது இல்லத்தில்
நடைபெற உள்ளது. இவ் வழிபாட்டு நிகழ்விற்கு வருகை
தந்து அன்னாரின் நிகழ்வில் பங்கு
கொள்வதுடன் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் எம்மோடு
இணைந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"அடிவானில் அதிகாலை விடிவெள்ளி தோன்றுமென
விழித்திருந்த வேளையிலே
முடிவில்லா வால்வெள்ளி முடித்ததுவோ உன் வாழ்வை
நெடிதான நெருப்பாறு பல கடந்து வந்து மிகத்தேறி,
படிமானம் உற்ற வேளை காலதூதர் தடுமாறி கடிதனவே,
சூடாமணி போல் இருந்த என் சந்திரனை ஏமாற்றி,
இடியேறு விழுந்தது போல் எடுத்தனரோ எம்முறவை,
படிமானம் அற்ற வாழ்வில் பிரிவுத்துயர் எனைத் தொடர,
அடியொற்றி நான் வருவேன் என்றும் அருகிருந்து,
கடிவாளம் போல் இருந்து கண் இமைபோல்
எழுபிறப்பும் நிதம் என்னைக் காத்தருள்வாய்"

பத்திரகாளி கோவில் வீதி,
பருத்தித்துறை.

(சி-1556)

நீங்காப்பிரிவுத்துயருடன்
கணவர், குடும்பம், உறவினர்.

தோற்றம்-17.12.1947

மறைவு-14.10.2024

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க தமிழ்... வளர்க சைவம்

# பாராளுமன்றத் தேர்தல் - 2024




வெல்வோம்
வெல்வோம்
சைவத்
தமிழ்த் தேசியம்
நாளை நமதே,
ஆறும் நமதே

**பாலசிங்கம் ஜயமாறன்**
Quantity Surveyor
சுயேட்சைக்குழு - 12

X 4

## கொள்கை

01. இலங்கை அரசியலமைப்பில் சைவ சமயத்துக்கு முன்னுரிமை விதி சேர்க்க.
02. மதமாற்றத் தடைச் சட்டம் நாடாளுமன்றத்தில் இயற்றுக.
03. பசு வதைத் தடைச் சட்டம் நாடாளுமன்றத்தில் இயற்றுக.
04. இலங்கைத் தீவு முழுவதும் ஒரே குடியியல், குற்றவியல் சட்டங்களை அரசியலமைப்பு விதியாக்குக.
05. 2016 உச்ச நீதிமன்றத் தீர்ப்பு ஏற்ற 2008 இன் புதிய வழிபாட்டிடங்கள் அமைத்தல் தொடர்பான விதியைச் சட்டமாக நாடாளுமன்றத்தில் இயற்றுக.
06. அரசு சாா்பற்ற நிறுவனங்கள் வெளிநாடுகளில் இருந்து பெறும் நிதி வரவு விவரம் மூன்று மாதத்துக்கு ஒருமுறை அரச நடு வங்கிக்குப் பட்டியலாகத் தரும் சட்டம் நாடாளுமன்றத்தில் இயற்றுக.

(079)

உங்கள் வெற்றிச் சின்னம் ஆமை



" ஒரு வாக்கு, மாற்றம்
உங்கள் வாக்கு புதிய யுகத்தின் முதற்படி!"



**அ.கிருபாகரன்**
( கிருபா லேணர்ஸ் உரிமையாளர் )

X 2

(சி-191)

பாராளுமன்ற தேர்தல் - 2024



# பாராளுமன்றத் தேர்தல் -2024

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம் இல : 10

சர்வசன அதிகாரம் கூட்டணியில்
இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பட்டியலில்
நம்பிகள் நல்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையாதரவுடன்
இலங்கை சிறுபான்மை தமிழர் மகாசபை ஆதரவுடன்



இலஞ்சம், ஊழல், தாமதத்தை இல்லாதொழிக்கவும், பெண்ணிய விடுதலை, சமூக விடுதலைக்கூடாக சமத்துவம்,சமதா்மம், சோசலிஸ பாதையினூடாக தமிழ்த் தேசிய விடுதலையைப் பெற்றுக் கொள்ள...
பதக்கச் சின்னத்தில் இலக்கம் 8 இற்கு வாக்களித்து
**வி.கே.தனபாலா** அவர்களை
வெற்றிபெறச் செய்யுங்கள்

சர்வசன அதிகாரம்
සර්වජන බලය
SARVAJANA BALAYA
X

1 2 3 4 5 6 7 8 9

**V.K.தனபாலா**
B.A (Cey), P.G.D.in.pub.Admin, Dip.in. Sinhala.
அரசறிவியல் விரிவுரையாளர், முன்னாள் கிராம உத்தியோகத்தர், சமாதான நீதவான், காரத்தே ஆசிரியர்(5 th Dan)

(085)



# நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2024

எங்கள் நலனுக்காக உழைப்பவர்கள் (யாழ் - கிளிநொச்சி மாவட்டம்)




3

கிருஸ்ணபிள்ளை
மனோகரன் (பவா)

முன்னாள் அமைச்சர்
டக்ளஸ்
தேவானந்தா
ஆகியோர் வெற்றி
பெற உழைப்போம்!

4

(சி-202)

X 3 4

பனை தென்னை வள கூட்டுறவுச் சங்க நலன்விரும்பிகள்



# பாராளுமன்றத் தேர்தல் - 2024

யாழ்.கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்




ஏற்றமிகு எதிர்கால சந்ததியின்
ஆற்றல்மிகு ஆளுமைகளை ஆதரிக்க....

தன்னாட்சி, தற்சார்பு, தன்னிறைவு

**தமிழ் மக்கள் கூட்டணி**

(சி-193)

**தவச்செல்வம் சிற்பரன்**
(கட்டடக் கலைஞர், பழைய மாணவன் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, கொழும்பு றோயல் கல்லூரி, மொறட்டுவைப் பல்கலைக்கழகம்)

3

X

**உமாகரன் இராசையா**
(சட்டத்தரணி)

1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜோ பைடனை சந்திக்கிறார் ட்ரம்ப்





(வோஷிங்டன்)

ட்ரம்ப் அடுத்த ஆண்டு ஜனவரி 20 ஆம் திகதி வோஷிங்டனில் பதவியேற்க இருக்கிறார்.

ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ட்ரம்புக்கு தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடன் வாழ்த்துத் தெரிவித்தார்.

அமெரிக்காவின் 47 ஆவது ஜனாதிபதியாக, குடியரசுக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் தேர்வு செய்யப்பட்டார்.

அவருக்கு உலகத் தலைவர்கள் பலர் வாழ்த்துத் தெரிவித்து வருகின்றனர்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் துணை ஜனாதிபதியான கமலா ஹாரிஸ் ஆகியோர் ட்ரம்புக்கு வாழ்த்து தெரிவித்தனர். ட்ரம்ப் அடுத்த ஆண்டு ஜனவரி 20 ஆம் திகதி வோஷிங்டனில் பதவியேற்க இருக்கிறார்.

ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ட்ரம்புக்கு வாழ்த்துத் தெரிவித்த தோடு வெள்ளை மாளிகையில் வந்து சந்திக்குமாறு ஜனாதிபதி ஜோ பைடன் அழைப்பு விடுத்திருந்தார்.

இந்நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்பும் நாளை மறுதினம் புதன்கிழமை சந்தித்துப் பேச உள்ளனர் என வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது. (நி-8)

# லெபனான் மீது வ…

# குழந்தைகள் உட்…

(பெய்ரூட்)

**லெபனான் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதல்களில் பல குழந்தைகள் உட்பட சுமார் 40 பேர் கொல்லப்பட்டதாக லெபனான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். லெபனான் தலைநகர் பெய்ரூட்டின் தெற்கு புறநகர் பகுதிகளை ஒரே இரவில் இஸ்ரேல் கடுமையாக குண்டுவீசித் தாக்கியது.**

கடந்த வெள்ளிக்கிழமையில் இருந்து கடலோர நகரமான டயரில் குறைந்தது ஏழு பேர் கொல்லப்பட்டனர் என்று லெபனான் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

முன்னதாக இந்த நகரில் இருக்கும் பொது மக்கள் வெளியேற வேண்டும் என்று இஸ்ரேலிய இராணுவம் உத்தரவிட்டு இருந்தது. எனினும், வெள்ளிக்கிழமை தாக்குதல் குறித்து இஸ்ரேல் இராணுவம் சார்பில் எந்த உத்தரவும் வெளியிடப்படவில்லை.

உயிரிழந்தவர்களில் இரண்டு குழந்தைகள் இடம்பெற்றுள்ளதாக லெபனான் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தாக்குதல் நடந்த பகுதிகளில் மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தாக்குதலுக்குப் பிறகு மீட்கப்பட்ட மற்ற உடல் பாகங்களை அடையாளம் காண டி.என்.ஏ. சோதனை செய்…

## தென்னிந்திய நடிகர்
## டெல்லி கணேஷ் காலமானார்

(சென்னை)

தென்னிந்திய பிரபல நடிகர் டெல்லி கணேஷ் உடல்நலக்குறைவால் காலமானார்.

கடந்த சில தினங்களாக உடல்நலக்குறைவால் அவதிப்பட்டு வந்த 80 வயதான டெல்லி கணேஷ் சென்னை ராமாபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் அவர் தூக்கத்திலேயே காலமானதாக இந்திய செய்திகள் தெரிவித்துள்ளன.

இவர் நகைச்சுவை கதாபாத்திரங்களில் தனித்துவ பாணியைப் பின்பற்றிச் சாதித்தவர்.

இவரின் மறைவிற்கு திரைத்துறையைச் சேர்ந்த பலரும் சமூக வலைத்தளங்களில் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.



நாடக நடிகராக இருந்து தமிழ் திரையுலகில் வில்லன் மற்றும் குணச்சித்திர கதாபாத்திரங்களில் டெல்லி கணேஷ் நடித்துள்ளார்.

தூத்துக்குடியில் பிறந்த இவர் தமிழ், தெலுங்கு, மலையாளம் மற்றும் கன்னடம் ஆகிய மொழிகளிலும் நடித்துள்ளார்.

தமிழில் நாயகன், அபூர்வ சகோதரர்கள், சங்கமம், அவ்வை சண்முகி, இந்தியன் 2 உட்பட 400 இற்கும் மேற்பட்ட படங்களில் நடித்தவர் டெல்லி கணேஷ். அவரது உடல் பொது மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. (நி-8)

## கல்விக்கான விசேட விரைவு
## விசா திட்டம்
## இரத்து செய்த கனடா



(ஒட்டாவா)

இந்தியாவுக்கும் கனடாவுக்கும் இடையிலான இராஜதந்திர மோதல்கள் அதிகரித்து வரும் நிலையில், கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தலைமையிலான கனேடிய அரசாங்கம் எஸ்.டி.எஸ் என்ற பிரபலமான கல்விக்கான விசேட விரைவு விசா திட்டத்தை உடன் அமுலுக்கு வரும் வகையில் நிறுத்தியுள்ளது.

ஆயிரக்கணக்கான சர்வதேச மாணவர்களுக்கு கனடாவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வான்தாக்குதல் ...பட 40 பேர் பலி!



யப்பட இருக்கிறது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை மற்ற நகரங்களில் நடந்த தாக்குதல்களில் 13 பேர் கொல்லப்பட்டனர்.

இதில் ஹிஸ்புல்லா மற்றும் அதன் கூட்டு அமைப்புகளைச் சேர்ந்த ஏழு மருத்துவர்கள் அடங்குவர். இதே போல் வரலாற்று நகரமான பால்பெக்கைச் சுற்றியுள்ள கிழக்கு சமவெளிகளில் நடத்தப்பட்ட இஸ்ரேலிய தாக்குதல்களில் குறைந்தது 20 பேர் கொல்லப்பட்டனர்.

லெபனானில் கடந்த ஆண்டு இஸ்ரேலிய தாக்குதல்களில் குறைந்தது 3 ஆயிரத்து 136 பேர் கொல்லப்பட்டனர்.

மேலும் 13 ஆயிரத்து 979 பேர் காயமடைந்துள்ளனர். இதில் 619 பேர் பெண்கள் மற்றும் 194 குழந்தைகள் அடங்குவர். (நி-8)

உயர் படிப்புக்கான விசாக்களை விரைவாகப் பெற அனுமதிக்கும் இந்த விசா திட்டத்தின் நிறுத்தமானது இந்தியா உட்பட சர்வதேசத்திலுள்ள மாணவர்கள் மீது கடுமையான தாக்கத்தை செலுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியா உட்பட 14 நாடுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கான விசா விண்ணப்ப செயல்முறையை எளிதாக்கும் வகையில் கனேடிய அரசாங்கத்தால் கடந்த 2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட எஸ்.டி.எஸ் விசா திட்டமானது அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்த திட்டத்தின் மூலமாக கடந்த 2022 ஆம் ஆண்டு வரை 3 இலட்சத்திற்கும் அதிகமான இந்திய மாணவர்கள் பயனடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஒட்டாவாவில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் கூற்றுப்படி, கனடாவில் 427,000 இந்திய மாணவர்கள் கல்வி கற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (நி-8)

# காசா போருக்கு முடிவு கட்டுவார் ட்ரம்ப்

## பாலஸ்தீன ஜனாதிபதி நம்பிக்கை



(ரமல்லா)

"காசா போருக்கு விரைவில் முடிவு கட்டி, அங்கு அமைதியை ஏற்படுத்துவார் ட்ரம்ப்" என பாலஸ்தீன ஜனாதிபதி முகமது அப்பாஸ் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள டொனால்ட் ட்ரம்ப், உடன் தொலைபேசியில் பேசிய பாலஸ்தீன ஜனாதிபதி முகமத் அப்பாஸ், அவருக்கு வாழ்த்து தெரிவித்தார்.

அப்போது காசா போர் குறித்தும் பேசியதாக ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து பாலஸ்தீன ஜனாதிபதி அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது,

அமெரிக்க ஜனாதிபதியாக மீண்டும் தேர்வாகியுள்ள ட்ரம்ப் உடன் இணைந்து செயற்பட்டு, காசாவில் அமைதியை ஏற்படுத்துவோம்.

ட்ரம்பும் எங்களுடன் இணைந்து செயற்பட்டு, காசா போரை முடிவுக்கு கொண்டு வருவதாக உறுதி தெரிவித்தார் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

# உலகின் மிகப்பெரிய கோழி வடிவ ஹோட்டல்



(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டில் உலகின் மிகப்பெரிய கோழி வடிவ ஹோட்டல் ஒன்று கட்டப்பட்டுள்ளது.

காம்புஸ் டோஹான் ஹைலேண்ட் ரிசார்ட்டின் ஒரு பகுதியாக கட்டப்பட்டுள்ள இந்த கோழி வடிவ ஹோட்டல் 34.931 மீற்றர் (114 அடி 7 அங்குலம்) உயரமும் 12.127 மீற்றர் (39 அடி 9 அங்குலம் ) அகலமும் 28.172 மீற்றர் (92 அடி 5 அங்குலம்) நீளமும் கொண்டது. இந்த ஹோட்டலில் 15 அறைகள் உள்ளன.

2023 ஜூன் 10 ஆம் திகதி தொடங்கப்பட்டு 2024 செப்ரெம்பர் 8 ஆம் திகதி கட்டி முடிக்கப்பட்ட இந்த ஹோட்டல் உலக கின்னஸ் சாதனை புத்தகத்திலும் இடம்பிடித்துள்ளது.

கடுமையான புயல் மற்றும் சூறாவளியை தாங்கும் வகையில் இந்த ஹோட்டல் வடிவமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

# ட்ரம்பை கொல்ல முயற்சியா

## ஆதாரமற்றது என ஈரான் மறுப்பு

(டெஹ்ரான்:)

அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்க உள்ள டொனால்ட் ட்ரம்ப்பை கொலை செய்ய முயற்சித்ததாக எழுந்துள்ள குற்றச்சாட்டை மறுத்துள்ள ஈரான், இது ஆதாரமற்றது எனக் கூறியுள்ளது.

அமெரிக்கா ஜனாதிபதியாக பதவியேற்க உள்ள ட்ரம்ப்பை பிரசாரத்தின் போது கொலை செய்ய இரண்டு முறை முயற்சி நடந்தது. அதில் அவர் அதிஷ்டவசமாக உயிர் தப்பினார். இந்நிலையில் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக ட்ரம்ப்பை கொலை செய்ய திட்டமிட்டதாக கூறி, ஈரானின் துணை இராணுவ குழு உறுப்பினர் ஒருவர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டு உள்ளது.

இது தொடர்பாக ஈரான் வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் இஸ்மாயில் பகாய் கூறியதாவது, கடந்த காலங்களிலும் ஈரான் மீது இது போன்ற குற்றச்சாட்டுகள் கூறப்பட்டன. அவற்றை தொடர்ந்து மறுத்து வந்துள்ளோம். தவறு என நிரூபித்து விட்டோம். மீண்டும் இதேபோன்ற குற்றச்சாட்டுகளை கூறி, அமெரிக்க - ஈரான் இடையிலான உறவை இன்னும் சிக்கல் ஆனதாக மாற்ற ஈரான் விரோத சக்திகள் முயற்சி செய்து வருகின்றன. இவை அனைத்தும் அடிப்படை ஆதாரம் அற்றவை இவ்வாறு அவர் தெரிவித்தார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனவரியில் உள்ளூராட்சி தேர்தல்



(கொழும்பு)

நீண்ட காலமாக தாமதிக்கப்பட்டு வந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் நடைபெறவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாராளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் அதற்கான ஏற்பாடுகளை தேர்தல்கள் ஆணைக்குழு விரைவிலேயே ஆரம்பிக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த தேர்தலுக்கு எட்டு பில்லியனுக்கும் அதிகமாக செலவாகும் என முன்னர் மதிப்பிடப்பட்டிருந்த நிலையில், தேர்தலை நடத்துவதற்கான நிதியைப் பெறுவதற்கு தேர்தல் ஆணையம் புதிய மதிப்பீடுகளை திறைசேரிக்கு அனுப்பும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம். ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

முன்னதாக தேர்தல்கள் ஆணையம், உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக, 2023 ஆம் ஆண்டு 8 பில்லியன் ரூபாய்களை மதிப்பிட்டிருந்தபோதும், தற்போதைய தேர்தல் செலவு அதைவிட அதிகமாக இருக்கும் என்பதால் புதிய மதிப்பீடுகளை அனுப்பவுள்ளதாக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை இரத்துச் செய்து புதிதாக வேட்புமனுக்களை கோருவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

முன்னதாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலை கூடிய விரைவில் நடத்துவதற்கான ஆயத்தங்களை மேற்கொள்ளுமாறு இந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் இலங்கையின் உயர்நீதிமன்றம் தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்டமையும் குறிப்பிடத்தக்கது. (நி-8)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 250 | 300 | 350-400 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 190 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 300 | 250-300 | 400 |
| தக்காளி | 300 | 350 | 250 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 240 | 100-150 | 200 |
| கோவா | 200 | 200 | 250 | 300 |
| கரட் | 160 | 180 | 150 | 200 |
| பூசணி | 100 | 80 | 100 | 200 |
| புடோல் | 160 | 150 | 250 | 200 |
| வாழைக்காய் | 100 | 120 | 80-100 | 200 |
| சின்ன வெங்காயம் | 320 | 300 | 150-300 | 400 |
| பெரிய வெங்காயம் | 300 | 250 | 290 | 300 |
| பாகற்காய் | 450 | 650 | 500 | 800 |
| வெண்டைக்காய் | 80 | 120 | 80-100 | 200 |
| கருணைக் கிழங்கு | 140 | 150 | 130 | 200 |
| பயற்றங்காய் | 200 | 200 | 150-200 | 250 |
| லீக்ஸ் | 200 | 250 | 250 | 300 |
| பீற்றூட் | 140 | 150 | 130 | 200 |
| கறிமிளகாய் | 550 | 600 | 400-450 | 600 |
| முருங்கைக்காய் | 400 | 130 | 40-60 | 400 |
| போஞ்சி | 350 | 300 | 300 | 500 |
| கத்தரிதம்புள்ள | 200 | 350 | -- | 200 |
| கீரை - 1 பிடி | 150 | 150 | 50-70 | 150 |
| தேசிக்காய் | 400 | 500 | 400-550 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 150 | 90-155 | 120-180 |
| இராசவள்ளி | -- | 1000 | 630 | 1500 |
| வெங்காயப்பூ | 400 | -- | -- | 400 |
| முள்ளங்கி | 100 | 180 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 90 | 80 |
| வல்லாரை | 60 | 80 | -- | 80 |
| ஈரப்பலா | 120 | -- | -- | 200 |

# இன்று ஒரு தகவல் 260



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## அறிவு பலம்

இந்தக் காலத்தில் சின்னப் பிள்ளைகளை சமாளிப்பது மிகவும் கடினம். ஒரு நாள் ஒரு பத்து பதினைந்து பாடசாலைப் பிள்ளைகள் ஏதோ ஒரு ஒலிப்பதிவுக்காக இங்கே வந்திருந்தார்கள். வழியிலே நான் மாட்டிக் கொண்டேன். ஒரு சின்னப் பையன் நிமிர்ந்து பார்த்தான். சார் இன்று ஒரு தகவலை என்னை மாதிரி சின்னப் பிள்ளைகள் தான் கேட்கிறோம். அதனாலே எங்களுக்குப் பிடிக்கிற மாதிரி ஏதாவது கதை சொல்லுங்கள் சேர் என்று சொன்னான்.

அப்பிடித்தானே சொல்கிறேன். இருந்தாலும் பல சமயம் அது எங்கள் பாடசாலையையே ஞாபகப்படுத்துகிறது என்றான்.

அது எப்படி என்றேன். எங்கள் வகுப்பிலே வாத்தியார் பாடம் நடத்துவதற்கும் நீங்கள் தகவல் சொல்லுவதற்கும் பல சமயங்களிலே வித்தியாசம் தெரிவதில்லை என்றான்.

இதிலிருந்து அவன் என்னை கௌரவப்படுத்துகின்றானா இல்லை காலை வாருகின்றானா என்று ஒன்றும் புரியவில்லை.

இருந்தாலும் ஒரு வழியாக சமாளித்து அவர்களை அனுப்பி வைத்தேன்.

அப்படியான பிள்ளைகளுக்கு இன்று ஒரு எளிமையான ஒரு கதை சொல்லுவோம். ஒரு பாடசாலையிலே வகுப்பு முடிந்து மணியடித்து விட்டது. பிள்ளைகளெல்லாம் சந்தோசமாக சத்தம் போட்டுக் கொண்டு வெளியிலே ஓடி வந்தார்கள்.

ஒரு பெரியவர் அந்த வழியாக போய்க்கொண்டு இருந்தார். அவரின் காலிலே புதிதாக வாங்கிய செருப்பைப் போட்டிருந்தார். பார்க்கும் பொழுது அழகாக இருந்தது.

ஒரு குறும்புக்கார சிறுவன் அதைக் கவனித்தான். இவரை எப்படியாவது ஏமாற்றி அந்த செருப்பை எடுத்துக் கொண்டு ஓடிப்போய் விட வேண்டும் என்று நினைத்தான். மற்றச் சிறுவர்களுடன் இணைந்த ஒரு திட்டம் போட்டான்.

இன்னொரு சிறுவன் அந்தப் பெரியவரை ஏமாற்றுவதற்கு ஒரு யோசனை சொன்னான். அதாவது அவரை ஒரு மரத்திலே ஏறச் சொல்லுவோம். அவர் செருப்பை கழற்றிவிட்டு மேலே ஏறுவார். உடனே நாம் அதைத் தூக்கிக் கொண்டு ஓடிப்போவோம் என்று சொன்னான். சரி என்று எல்லோரும் ஒத்துக் கொண்டார்கள்.

உடனே எல்லோரும் மிகவும் நல்ல பிள்ளைகள் மாதிரி அந்த பெரியவரிடம் சென்றார்கள். ஐயா எங்களாலே இந்த மரத்தில் ஏற முடியவில்லை. நீங்கள் பெரியவர். உங்களுக்கு அனுபவம் இருக்கும். நீங்கள் ஒரு தடவை ஏறிக்காட்டினீர்கள் என்று சொன்னால் நாங்கள் கற்றுக் கொள்வோம் என்று சொன்னார்.

பெரியவர் சரி என்று ஒத்துக் கொண்டார் . ஆனால் மனதிற்குள் ஒரு சந்தேகம்.

ஏன் திடீர் என்று இந்தப் பிள்ளைகள் கேட்கிறார்களே என்று. ஒரு சிறுவன் காலிலே இருக்கிற காலணியையும் பெரியவரையும் கவனிப்பதை அவர் கவனித்து விட்டார். சரி இருக்கட்டும் என்று நினைத்துக் கொண்டார்.

சரி பிள்ளைகளே உங்களுக்கு மரம் ஏறித் தானே காட்ட வேண்டும். சரி இதோ பாருங்கள் என்று கூறினார். சிறுவர்களுக்கு மனதிலே ஒரு சந்தோசம் பெரியவர் ஏமாந்து விடப்போகிறார் என்று. ரொம்ப அக்கறையாக அவரைப் பார்த்துக் கொண்டு இருந்தார்கள். செருப்புகளை கழற்றினார் தனது இடுப்பிலே செருகிக் கொண்டார். பின்பு மரத்திலே ஏற ஆரம்பித்தார்.

சிறுவர்கள் திகைத்துப் போய் நின்று விட்டார்கள். தங்களது திட்டம் நிறைவேறாது போல இருக்கிறதே என்று எண்ணி ஒரு பையன் அவரைப் பார்த்து ஐயா மரத்தில் ஏறும் போது ஏன் செருப்பை கூடவே எடுத்துக் கொண்டு செல்கின்றீர்கள்.

அங்கே என்ன நடை பாதையா இருக்கிறது. செருப்பை கீழே போட்டுவிட்டு போங்கள் என்று கூறினான்.

அதற்கு பெரியவர் நீ சொல்வது மாதிரி செருப்பை கீழே போட்டுவிட்டு போகலாம். ஒரு வேளை மரத்தின் மேலே நடைபாதை இருந்தால் என்ன செய்வது. அதனால் தான் எச்சரிக்கையாக அதை எடுத்து கொண்டு போகின்றேன் என்று கூறினான். அதனாலே புத்திசாலிகளை ஏமாற்றுவது கஸ்டம். இதை சிறு பிள்ளைகள் புரிந்து கொள்ள வேண்டும். உடம்பு பலம் மட்டும் இருந்தால் போதாது. அறிவு பலமும் வேண்டும். அதை வளர்த்து கொள்ளவேண்டும்.

ஒரு குரங்கு ஒரு மரத்தின் மேலே உடகார்ந்து இருந்தது. அந்த மரத்திற்கு அடியிலே ஒரு சிங்கம் நின்றது.

சிங்கத்திற்கு ரொம்ப பசி. ரொம்ப சாமர்த்தியமாக அந்தக் குரங்கைப் பார்த்து ஏன் அதிக நேரமாக அங்கேயே உட்கார்ந்து இருக்கின்றாய். இங்கே கீழே இறங்கி வா. விளையாடலாம் என்றது.

குரங்கு சொன்னது நான் தான் கீழே வந்தால் நீ என்னை கடித்து தின்று விடுவாயே அதனால் நீ உனது வாயை மூடிக் கட்டிக் கொள். அதோடு உனது கால்களையும் கட்டிக் கொள் என்றது.

சிங்கம் அதே மாதிரி செய்தது. தனது வாயையும் கால்களையும் சேர்த்து கட்டிக் கொண்டது. அதன் பின்பு அந்தக் குரங்கு கீழே இறங்கி வந்து சிங்கத்திடம் சென்றது.

அப்போது அதன் உடம்பு நடுங்கியது. ஏன் நடுங்குகிறது என்றது சிங்கம். நான் நடுங்கவில்லை. உணர்ச்சி வசப்படுகின்றேன் என்றது குரங்கு. ஏன் என்று கேட்டது சிங்கம். முதல் முறையாக இன்று தான் சிங்கத்தின் கறியை சாப்பிட்டு பார்க்கப் போகின்றேன் அதனாலே தான் அப்படி என்றது குரங்கு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கையை உலுக்கிய துப்பாக்கிச் சூடு

## பெண்உட்பட இருவர் பலி

(கொழும்பு)

அம்பலாங்கொடை - உரவத்த பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் பெண் உட்பட இருவர் உயிரிழந்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று முற்பகல் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். ( நி-8)

# நவம்பர் மாதத்திற்கான அஸ்வெசும கொடுப்பனவு

(கொழும்பு)

அஸ்வெசும பயனாளிகளின் நவம்பர் மாதத்துக்கான கொடுப்பனவு குறித்து அஸ்வெசும நலன்புரி நன்மைகள் சபை புதிய தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளது. அதன்படி, இன்று திங்கட்கிழமை அஸ்வெசும பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் நவம்பர் மாதத்துக்கான கொடுப்பனவுத்தொகையை வரவு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி நாளை செவ்வாய் கிழமைமுதல்அஸ்வெசுமபயனாளிகள் தங்களது வங்கிக் கணக்குகளிலிருந்து கொடுப்பனவு தொகையைப் பெற்றுக் கொள்ள முடியும்என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த காலங்களில் அஸ்வெசும கொடுப்பனவு கிடைக்காத குடும்பங்கள் அல்லது தனிநபர்கள் இருப்பின் விசாரணை நடத்தி அவர்களுக்கு நீதி வழங்கப்படும் என அரசாங்கம் அண்மையில் அறிவித்துள்ளது.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட நபர்களைக் கண்டறிந்து முறையான விசாரணைகளை மேற்கொள்வதற்கு 10 பேர் கொண்ட குறித்த குழு நியமிக்கப்பட்டுள்ளது.

மேலும்நியாயமான காரணங்களின்றி குறித்த குடும்பங்களுக்கு அஸ்வெசும கொடுப்பனவுகள் கிடைக்காத பட்சத்தில் அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான வேலைத்திட்டத்தை அரசாங்கம் ஏற்கனவே தயாரித்துள்ளதாக தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)


" மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம் "

பாராளுமன்றத் தேர்தல் - 2024

யாழ்.கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்


3
திருமதி.பு.விஜயலக்சுமி


5
திரு.ம.தர்சன்


6
திரு.ச.மனோகரன்


7
செல்வி.ச.வளர்மதி


2
சைவப்புலவர்
N.P. ஸ்ரீந்திரன்
(முதன்மை வேட்பாளர்)


X

"வெல்லும் சைவத் தமிழ்த் தேசியம்"

1. 4 இலட்சம் சைவ வாக்காளப் பெருமக்களே!
2. போலித்தமிழ்த் தேசியத்தைப் புறந்தள்ளுங்கள்.
3. சைவம் காக்க ஆமைக்கே! வாக்களியுங்கள்
4. சைவத்தமிழ்த் தேசியம் வெல்ல ஆமைக்கே! வாக்களியுங்கள்


8
திரு.ச.நிமலராஜன்


9
திரு.சி.தர்மகுமார்

(சி-192)



பாராளுமன்றத் தேர்தல் - 2024

பொன்னை பொருளை பெறு நற் புத்திரனை தன் தமிழுக்காய்
ஈந்த தலைவர் தர்மலிங்கத்தின் புதல்வன்

யாழ். கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்



சித்தார்த்தன்

என்றும் எம் தமிழ் இனத்திற்காய்
தன்னை ஈந்த பெருந்தகையை
ஆதரிப்போம்

- கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியின் உருவாக்கத்திற்காக தனது குடும்ப சொத்தை (226 பரப்பு) 100 கோடி பெறுமதி கொண்ட நிலத்தை நன்கொடையாக வழங்கியவர்.
- கல்வியே கண்ணெனக் கொண்டு பாடசாலைகள் அற்ற பிரதேசத்தில் அறிவுப் பசியினை போக்க தன் கிராமமான கந்தரோடையில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை ஆகிய பாடசாலைகள் உருவாக்குவதற்கு தமது சொத்தின் பெரும்பகுதியை வழங்கி பல்லாயிரக் கணக்கானோர்களின் அறிவுப் பசியை தீர்த்தவர்கள்.
- தமது சொந்த நிலத்தில் யாழ்ப்பாணத்தில் பெரியவர்கள். சிறியவர்கள் இளைப்பாறி மகிழ சுப்பிரமணியம் பூங்காவினை உருவாக்கியவரின் வழித்தோன்றல் சித்தார்த்தனே...

X 5

ஒற்றுமைக்காய்
ஒன்றிணைந்து...
எம் மக்களுக்காய் சேவை
செய்யும்
எம்மவர்களை
ஆதரிப்போம்

பாலச்சந்திரன்
கஜதீபன்



X 5 6

(073)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேர்தல்களம்




# மாவீரர்கள் காட்டிய பாதையில் பயணிப்பேன்

## வேட்பாளர்-சுகாஷ்



(யாழ்ப்பாணம்)

தமிழ் தேசிய இனத்தின் உரிமைசார் அரசியல் பயணத்தில் கொள்கை தவறாது மாவீரர்கள் காட்டிய பாதையில் நேர்மையுடன் பயணிப்பேன் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வேட்பாளர் க.சுகாஷ் தெரிவித்தார்.

ஈழத் தமிழருக்கு நீதி கேட்டு ஐக்கிய நாடுகள் சபை உட்பட சர்வதேச மன்றங்களில் குரல் கொடுத்து வரும் நான் என்னுடைய அரசியல் பயணத்தில் தடம் மாறினால் என்னை கேள்வி கேட்கவும் உங்களுக்கு அதிகாரம் உண்டு.

கொள்கை தவறாது நான் என் பயணத்தை முன்னெடுக்க சிந்தித்து வாக்களியுங்கள் எனத் தெரிவித்தார். (நி-8)

# உங்கள் வாக்கு உங்கள் எதிர்காலம்

## சரியாகப் பயன்படுத்துங்கள் வேட்பாளர்-சிறீதரன்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு மக்கள் வழங்கப்போகும் ஆணைதான் எமது மக்கள் விரும்பும் வகையிலான கட்சியின் மீளெழுச்சிக்கு வித்திடும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

வன்னேரிக்குளத்தில் இடம் பெற்ற பிரசாரக் கூட்டத்தில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இதுவரை காலமும் தமிழ் மக்களின் அரசியல் வெறுமையின் வடிகாலாக, தமிழ் தேசிய அடையாளமாக இலங்கை தமிழரசுக் கட்சி இருந்து வந்ததைப் போலவே உட்கட்சி விரிசல்களை சீரமைத்து எமது மக்களின் அரசியல் அடையாளமாக கட்சியை மீளக்கட்டி எழுப்பும் காலப்பணி எமக்குள்ளது.



அத்தகைய பணிகளை நாம் ஆற்றுவதற்கு நீங்கள் எமக்கு வழங்கப் போகும் ஆணையே உந்துசக்தியாக மாறும்.

இதனை உணர்ந்த எமது மக்களின் தெரிவுகள் அரசியல் அறம் சார்ந்ததும் தமிழ்த் தேசியக் கொள்கை சார்ந்துமே அமையும். எனவே உங்கள் வாக்கு உங்கள் எதிர்காலம் சரியாகப் பயன்படுத்துங்கள் எனத் தெரிவித்தார். (நி-8)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3255

### சுசில்

இந்த உலகத்திலேயே ரொம்ப நல்லவன் யாரு என்று கேட்டால்



யாருக்குமே முதலில அவங்க பேர் ஞாபகம் வராது... யோசிக்க ஆரம்பிச்சிடுவார்கள் அது தான் டிசைன்

### ரதித்தா



மேக்கப் போடும் பெண்களின் கவனத்திற்கு.. இனி வரும் நாட்களில் மழை பொழிய வாய்ப்பு உள்ளதால்... பெண்கள் வெளியே வராமல் இருப்பது நல்லது

### லோகேஷ்

என்ன இது தாஜ்மஹால் எங்க இருக்கு என்று கேட்டால் பேன்ஸி ஸ்டோர்ல இருக்கு என்று எழுதி இருக்கு



யோவ் நா அங்க தான் பார்த்து இருக்கேன் நீ வேணும் என்றால் போய் பாரு

### சங்கவி

ஸ்கூட்டியில் காலில் ஒரு Brake இருப்பது பெண்களுக்கு மட்டும் தான் தெரியும்



இந்த விடயம் அந்த கம்பெனிக்காரனுக்குக் கூட தெரியாது

### ராகவ்




### சஞ்சீவன்

என்னோட கேவலமான நிலைமைக்கு காரணமே அந்த நாய் தான்' யார சொல்லுறீங்கள்



வேற யாரு நான் தான்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## அடையாளம் மாறாத அரசியல் மாற்றமே உண்மையான மாற்றம்

### ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்



(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம் ஒரு மாதகாலத்துக்குள்ளேயே சறுக்குவதற்கு ஆரம்பித்துள்ளது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ். கலைத்தூது மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் மன்றத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைத் தமிழரசுக் கட்சி பழம்பெரும் கட்சியாகும். தற்போது மாற்றம் தேவை என்று கூறுபவர்கள் பழம்பெரும் கட்சியை விட்டுவிட்டு புதிய கட்சிக்கு வாக்களித்து விடுவார்கள் என்று எதிர்பார்க்கின்றார்கள். அது உண்மையான மாற்றம் அல்ல.

அடையாளம் மாற்றாத அரசியல் மாற்றமே உண்மையான மாற்றமாகும். நாட்டில் வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு தேசம் என்கிற அடையாளத்தினை வழங்கியது எமது கட்சியாகும். அதன் காரணத்தினால் தான் எமது கட்சியின் ஸ்தாபகரை தந்தை செல்வா என்று அழைக்கின்றார்கள்.

தமிழ் மக்களின் அபிலாஷைகள் பூர்த்தி செய்யப்படுவதற்கு சமஷ்டி அடிப்படையில் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்பதை ஆரம்பத்திலிருந்தே வலியுறுத்தி வருகின்றோம். அவ்வாறான நிலையில் ஏனைய கட்சிகள் தற்போது தான் சமஷ்டி பற்றி பேசுகின்றார்கள். அவ்வாறான நிலையில் நீண்டகாலமாக சமஷ்டியை வலியுறுத்தும் எமக்கு வாக்களிப்பதில் என்ன தவறுள்ளது என அவர் தெரிவித்தார். (நி-8)

## தேர்தல்களம்




## மாற்றத்தை நோக்கிய கொள்கைகளோடு...

### வேட்பாளர்-மணிவண்ணன்



(யாழ்ப்பாணம்)

சுயநிர்ணய உரிமை எமக்கு வேண்டும். எங்கள் புலம்பெயர் உறவுகளுடன் இணைந்து இந்த உரிமைகளை வென்றெடுப்போம் என தமிழ் மக்கள் கூட்டணியின் வேட்பாளர் வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்களுடைய வளம்மிக்க நிலங்கள் இராணுவ கையிருப்பில் இருக்கின்றன.

இது எங்கள் வாழ்வாதாரத்தையும் உரிமைகளையும் வலுவாகப் பாதிக்கிறது.

எனவே பேரினவாத அரசின் அடக்குமுறைகள் எம்மீது பிரயோகிக்கப்படுவதற்கு இனிமேலும் நாம் அனுமதிக்க கூடாது. இந்த நிலை மாற வேண்டும். வடக்கு-கிழக்கு தமிழர் தேசமாக அங்கீகரிக்கப்பட்டு தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழும் உரிமை ஏற்பட வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-8)

## மாற்றத்திற்கான நம்பிக்கையை நோக்கி...

### வேட்பாளர்-நா.கமலரூபன்



(யாழ்ப்பாணம்)

அரசியல் தீர்வு என்ற போர்வையில் இழுத்தடிப்புகளும் அபிவிருத்தி என்ற போர்வையில் திணிப்பு மற்றும் ஊழல் ஆட்சியே இதுவரை காணப்பட்டது. அரசியல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி சரியான நீரோட்டத்தில் இரண்டற பயணிக்க வேண்டும். அதனை மாற்றியமைக்க ஆளுமையுள்ள புதியவர்களை உள்ளடக்கிய மாற்று அணி தேவை என்கிறார் சுயேட்சைக் குழு 2 இன் வேட்பாளர் நாகரத்தினம் கமலரூபன்.

தமிழர் கலாசாரம் என்பது உலகெங்கிலும் போற்றப்படும் ஓர் விடயம். அதனது சுயாதீனத்தை இழக்காது தமிழர் பரப்பில் காணப்படும் கலாசார விழுமியங்கள் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். கல்வி, விளையாட்டு, முயற்சியாண்மைக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கப்பட வேண்டும். எனவே மாற்றத்திற்கான நம்பிக்கையை ஏற்படுத்த சி[illegible] தெரிவித்தார். (நி-8)

## விழிப்பே விடுதலையின் முதற்படி

### வேட்பாளர்-காண்டீபன்



(யாழ்ப்பாணம்)

அரசியல் அதிகாரம் இல்லாத அபிவிருத்தி தமிழர் தேசத்திற்கானதாக ஒரு போதும் அமையாது என்கிறார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வேட்பாளர் நடராஜர் காண்டீபன்.

யுத்த மௌனிப்பின் பின்னர் தமிழர் தேச அரசியல் தனியவே காப்பெற் வீதிகளாகவும் சிறு சிறு உட் கட்டுமானங்களாகவும் மட்டுமே மாறியிருப்பது ஒரு ஏமாற்று வேலை.

இனப்படு கொலையின் மூலம் தமிழினத்தை அழித்து ஆயுதங்களை மௌனிக்கச் செய்து எம்மை அனைத்து வழிகளிலும் அடக்கிய பின்னர் எமது நிலப்பரப்பில் எஞ்சியுள்ளவர்களை நிரந்தரமாக அழிக்க பேரினவாதம் கையிலெடுத்திருக்கும் இறுதி ஆயுதம் தான் போதை.

எனவே விழிப்புடன் செயற்படுவோம். விழிப்பே விடுதலையின் முதற்படி என காண்டீபன் தெரிவித்தார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவம்பர் மாத இராசி பலன்கள்-2024



கிரகநிலை- இராசியில் சனி (வ) - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் ராகு - சுக ஸ்தானத்தில் குரு(வ) - ரண ருண ரோக ஸ்தானத்தில் செவ்வாய் - அஷ்டம ஸ்தானத்தில் கேது - பாக்கிய ஸ்தானத்தில் சூ ரியன் - தொழில் ஸ்தானத்தில் புதன், சுக்கிரன் என கிரகநிலை உள்ளது.

## குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் நீங்கும்

**கிரகமாற்றம்:** 05.11.2024 அன்று ராசியில் சனி வக்கிரம் நிவர்த்தி ஆகிறார். 08.11.2024 அன்று தொழில் ஸ்தானத்தில் இருந்து சுக்கிரன் லாப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 13.11.2024 அன்று தொழில் ஸ்தானத்தில் புதன் வக்கிரம் ஆரம்பிக்கிறார். 16.11.2024 அன்று பாக்கியஸ்தானத்தில் இருந்து சூரியன் தொழில் ஸ்தானத்திற்கு மாறு கிறார்.

**பலன்கள்:** எந்தக் காரியம் செய்தாலும் அதில் முன்னேற்றம் காண வேண்டும் என்ற ஆர்வம் உடைய கும்ப இராசியினரே! நீங்கள் உழைப் பதற்கு அஞ்சாதவர். இந்த மாதம் நல்ல பலன்களைப் பெறுவதில் சிரமம் இருக்காது. வீணாக மனதை உறுத்திக் கொண்டிருந்த கவலை நீங்கும். எவ் வளவு திறமையுடன் செயற்பட்டாலும் காரிய தடங்கல் ஏற்படலாம். அடுத்த வருக்கு உதவிகள் செய்யும் போது கவனம் தேவை. பயணத்தினால் வீண் செலவும், அலைச்சலும் உண்டாகும்.

தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் இழுபறியான நிலை காணப்படும். புதிய ஓடர்கள் தொடர்பாக அலையும்படி இருந்தாலும் சாதகமாக முடியும். பணவரத்து திருப்தி தரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலு வலகம் தொடர்பான பணிகளில் முழு மூச்சுடன் செயற்பட்டு முன்னேற்றம் காண்பார்கள். பயணங்களின் போது உடமைகளை கவனமாக பாதுகாப்பாக வைப்பது நல்லது. குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் நீங்கும். கணவன், மனைவிக்கிடையே இருந்த மனவருத் தம் நீங்கும். குழந்தைகளின் எதிர் காலத்திற்கான திட்டங்களை செயற் படுத்துவீர்கள். புதிதாக வீடு - மனை வாங்குவதற்கான வேலைகளைத் தொடங்குவீர்கள். பெண்கள் மற்றவர்களின் பொறுப் புகளை ஏற்பதைத் தவிர்ப்பது நல்லது. வீண் அலைச்சல் உண்டாகலாம்.

அரசியல்வாதிகளுக்கு தொண்டர்க ளால் ஆதாயம் ஏற்படும். மக்கள் பிரச்சி னைகளைத் தீர்ப்பதில் ஆர்வம் காட்டு வீர்கள். மேலிடத்திலிருந்து மகிழ்ச்சி யான செய்திகள் வந்து சேரும்.




கலைத்துறையினருக்கு பணவரத்து இருக்கும். வராமல் இழுபறியாக இருந்த பணம் வந்து சேரும். வேலைப்பளு காரணமாக குடும்பத்தை விட்டுப் பிரிந்து இருக்க வேண்டிய சூழ்நிலை இருக் கும். மாணவர்கள் பாடங்களை படிப்பதில் முழுமூச்சுடன் ஈடுபடுவீர்கள். உங்களது பொருட்களின் மீது கூடுதல் கவனம் இருப்பது நல்லது.

**அவிட்டம் 3, 4ஆம் பாதங்கள்:** இந்த மாதம் தொழில், வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் கூடுதலாக பணியாற்ற வேண்டும். ஓடர்கள் கிடைக்க அலைய வேண்டி இருக்கும். பணவரத்து இருந்தாலும் கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்கள் கவனமாக செயற்படுவது நல்லது. புதிய பதவிகள் தொடர்பான விடயங்கள் தாமதப்பட்டாலும் பொறுப்புகள் அதிகரிக்கும்.

**சதயம்:** இந்த மாதம் குடும்பத்தில் இருப்பவர்களை அனுசரித்து செல்வது நன்மை தரும். வாழ்க்கைத் துணை யின் உடல் நலனில் அக்கறை தேவை. சிறிய விடயங்களுக்கு கூட கோபம் வரலாம். அதனால் உறவினர்கள், நண்பர்களிடம் கவனமாகப் பேசுவது நல்லது. விபரீத ஆசைகள் ஏற்படலாம். கவனம் தேவை.

**பூரட்டாதி 1, 2, 3ஆம்பாதங்கள்:** இந்த மாதம் பேச்சின் இனிமை சாது ரியம் இவற்றால் எடுத்த காரியங்களில் சாதகமான பலன் பெறுவீர்கள். உங் களது பொருட்களை கவனமாகப் பாது காத்துக் கொள்வது நல்லது.

**பரிகாரம்:** விநாயகப்பெருமானுக்கு தேங்காய் தீபம் ஏற்றி வழிபடுவது காரிய தடைகளைப் போக்கும். நன்மை கிடைக்கும்.

**அதிஷ்ட கிழமைகள்:** திங்கள், வியாழன் ;

**சந்திராஷ்டம தினங்கள் :** 25, 26, 27 ;

**அதிஷ்ட தினங்கள்:** 18, 19, 20



கிரகநிலை - இராசியில் ராகு - தைரிய வீரிய ஸ்தானத்தில் குரு(வ) - பஞ்சம பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் செவ்வாய் - களத்திர ஸ்தானத்தில் கேது - அஷ்டம ஸ்தானத்தில் சூரியன் - பாக்கிய ஸ்தானத்தில் புதன், சுக்கிரன் - அயன சயன போக ஸ்தானத்தில் சனி (வ) என கிரகநிலை உள்ளது.

**கிரகமாற்றம்:** 05.11.2024 அன்று அயன சயன போக ஸ்தானத் தில் சனி வக்கிரம் நிவர்த்தி ஆகிறார் .

## தொழில் வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும்

08.11.2024 அன்று பாக்கிய ஸ்தானத் தில் இருந்து சுக்கிரன் தொழில் ஸ்தா னத்திற்கு மாறுகிறார். 13.11.2024 அன்று பாக்கிய ஸ்தானத்தில் புதன் வக் கிரம் ஆரம்பிக்கிறார். 16.11.2024 அன்று அஷ்டம ஸ்தானத்தில் இருந்து சூரியன் பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** குடும்பத்தில் அக்கறை காட்டும் மீன இராசியினரே! நீங்கள் கவலை, பயம் இல்லாமல் செயற்படக் கூடியவர். எல்லா விடயத்திற்கும் மனசாட்சியை நம்புபவர். இந்த மாதம் உங்களுக்கு நல்ல பலனை அள்ளித் தரும் நிலையில் இருக்கிறது. நீண்ட நாட்களாக இருந்து வந்த உடல் உபாதை மறையும். எல்லாவற்றிலும் இருந்து வந்த மனக்கவலை நீங்கும். வாகனத்தில் செல்லும் போது எச்சரிக்கை தேவை. தாயின் உடல்நிலையில் கவனம் அவசியம். திட்டமிட்டபடி காரி யங்களைச் செய்ய முடியாமல் தடங் கல்கள் ஏற்படலாம். எனவே எந்த ஒரு வேலையை செய்வதாய் இருந்தாலும் தகுந்த முன்னேற்பாடுகள் தேவை.

தொழில் வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பணவரத்து இருக்கும். பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். உழைப்புக்கு ஏற்ற பலன் தாமதமாக கிடைக்கும். சக ஊழி யர்களிடம் அனுசரித்துச் செல்வது நல் லது. குடும்பத்தில் இதமான சூழ் நிலை காணப்படும். உறவினர்கள் வருகை இருக்கும். கணவன் மனைவிக் கிடையே ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. பிள்ளை களின் முன்னேற்றத்தில் கூடுதல் கவ னம் செலுத்துவீர்கள். புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

பெண்களுக்கு திடீர் செலவு உண் டாகலாம். காரியங்களில் தடை, தாமதம் ஏற்படலாம். கவனம் தேவை. அரசி யல்வாதிகளுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு உயரும். எதிர்க்கட்சியினர் உதவுவார்கள். மறைமுகப் போட்டிகள் இருக்கும். தொண்டர்களின் உதவியுடன் செயலாற்றுவீர்கள்.

கலைத்துறையினரின் படைப்புக




ளுக்கு மதிப்பு, மரியாதை கூடும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். உங்கள் உழைப்பினை தொடர்ந்து செய்வதன் மூலம் வெற்றியை உங்கள் பக்கம் தக்கவைத்துக்கொள்ளலாம். மாண வர்கள் மிகவும் கவனமாக பாடங்களை படிப்பது முன்னேற்றத்திற்கு உதவும்.

**பூரட்டாதி 4 ஆம் பாதம்:** இந்த மாதம் விரும்பியது கிடைக்க கூடுதல் முயற்சி தேவை. சந்திரன் சஞ்சாரத்தால் பணவரத்து அதிகரிக்கும். பயணம் மூலம் லாபம் கிடைக்கப் பெறுவீர்கள். புதிய நபர்கள் நட்பு உண்டாகும். வாகனம் மூலம் லாபம் வரும். அரசாங் கம் தொடர்பான காரியங்களில் சாத கமான பலன் கிடைக்கும்.

**உத்திரட்டாதி:** இந்த மாதம் பல விதத்திலும் புகழ் கூடும். மற்றவர்கள் பிரச்சினைகளில் வாதாடி வெற்றி பெறு வீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டிகள் விலகும். பழைய பாக்கிகள் வசூலாகும். வியாபாரத்தை விரிவாக்கம் செய்யத் தேவையான பண உதவியும் கிடைக்க பெறுவீர்கள். உத்தி யோகத்தில் இருப்பவர்களுக்கு நிலுவை யில் இருந்த பணம் வந்து சேரும். மேலதிகாரிகள் உதவி கிடைக்கும். சக ஊழியர் மத்தியில் இருந்து எதிர்ப்புகள் விலகும்.

**ரேவதி:** இந்த மாதம் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உறவினர்கள் வருகை இருக்கும். திருமணம் போன்ற சுப காரியம் நடக்கும். நிலம், வீடு மூலம் லாபம் கிடைக்கும். கணவன், மனை விக் கிடையே நெருக்கம் அதிகரிக்கும். சுவையான உணவு கிடைக்கும். மனோபலம் கூடும்.

**பரிகாரம்:** நவக்கிரகத்தில் குரு வுக்கு நெய் தீபம் ஏற்றி வழிபட செல்வம் சேரும். கல்வியில் வெற்றி கிடைக்கும் .

**அதிஷ்ட கிழமைகள்:** திங்கள், புதன்

**சந்திராஷ்டம தினங்கள்:** 1, 2, 28, 29

**அதிஷ்ட தினங்கள்:** 21, 22

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்- இந்திய ரோட்டறிக்கழக அங்கத்தவர்கள் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)
இந்திய ரோட்டரிக் கழக அங்கத்தவர்களுக்கும் - யாழ்ப்பாண ரோட்டரிக் கழக அங்கத்தவர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம்-அரியாலையில் இடம் பெற்றிருந்தது.

இதன்போது சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்தினரால் யாழ்ப்பாணம் விழிப்புணர்வற்றோர் சங்கத்திற்கு 165 வெள்ளைப் பிரம்புகள் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்தியத் துணைத் தூதர் சாய் முரளி கலந்து சிறப்பித்திருந்தார். (நி-8-33)

## தேர்தல்களம்




# பதவிகளுக்காக விலை போகமாட்டோம்

### வேட்பாளர் செல்வராஜா கஜேந்திரன்



(யாழ்ப்பாணம்)
பதவிகளுக்காகவோ சலுகைகளுக்காகவோ தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்றும் விலை போகாது என அக் கட்சியின் வேட்பாளர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்தார்.

எங்கள் மீது ஆக்கபூர்வமான விமர்சனங்களை செய்ய முடியாதவர்கள் போலியான அவதூறுகளை அள்ளி வீசுகின்றனர். மக்கள் இவற்றை தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும்.

உறுதியான தலைமைத்துவம் கொண்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பின் இந்த இனம் திரண்டு விடுதலை நோக்கி நகரும் காலம் வெகு தொலைவில் இல்லை என கஜேந்திரன் தெரிவித்தார். (நி-8)

# ரவிராஜின் நினைவு தினம் யாழில் அனுஷ்டிப்பு



(யாழ்ப்பாணம்)
சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ்ஜின் 18 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்றுக் காலை இடம்பெற்றது.

சாவகச்சேரியில் ரவிராஜின் உருவச்சிலை அமைந்துள்ள நினைவுச் சதுக்கத்தில் முன்னாள் நகர சபை உறுப்பினர் ஞா. கிஷோர் தலைமையில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ரவிராஜின் குடும்பத்தினர் கலந்துகொண்டு மலர்மாலை அணிவித்து சுடரேற்றி அஞ்சலி நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

இந்நிகழ்வில் ஆதரவாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (நி-8-30-33)

# தமிழ் மக்களுக்காக எப்போதும் குரல் கொடுப்பேன்

### வேட்பாளர் அங்கஜன்



(யாழ்ப்பாணம்)
தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்படுமானால் நான் அரசாங்கத்தில் இருந்தாலும் அவர்களுக்கு எதிராக குரல் கொடுப்பேன் என ஜனநாயக தேசிய கூட்டணியின் முதன்மை வேட்பாளர் அங்கஜன் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றின்போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

தமிழ்த்தேசியம் இல்லாமல் போய்விடவில்லை.

நான் செய்யும் வேலைத்திட்டம் உங்கள் கண்களுக்கு அபிவிருத்தியாக தெரியலாம். ஆனால் நான் செய்யும் வேலைத்திட்டம் தமிழ்த் தேசியத்தை வாழ வைக்கும் வேலைத்திட்டம். அந்தவகையில் நானும் தமிழ்த்தேசியவாதி தான்.

அரசாங்கத்தோடு இணைந்து தேவையானவற்றைப் பெறவே நாம் தமிழ்க் கட்சியில் களமிறங்கியுள்ளோம்.

அதுவே தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடு இடம்பெறுமானால் நான் அரசாங்கத்தில் இருந்தாலும் உள்ளுக்குள் இருந்தே அவர்களுக்கு எதிராகவும்-தமிழ் மக்களுக்கு ஆதரவாகவும் குரல் கொடுப்பேன்.

கடந்த 4 வருடங்களில் இதைத் தான் செய்தேன். நான் ஒன்றும் மொட்டுக் கட்சியில் போட்டியிட்டு பாராளுமன்றம் செல்லவில்லை. நான் சுதந்திரக்கட்சியில் போட்டியிட்டு மக்களின் ஆணையுடன் பாராளுமன்றம் சென்றவன்.

ஒன்றரை வருடங்கள் மொட்டு கட்சிக்கு ஆதரவளித்து அவர்களுடைய செயற்பாடு பிழை என்றவுடன் முதலில் அதனை சுட்டிக்காட்டிவிட்டு அரசாங்கத்தில் இருந்து வெளியேறியவர்கள் நாம். என மேலும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார். (நி-8-30)

# இராசிபலன்

11.11.2024
ஐப்பசி 25, திங்கட்கிழமை
தசமி பிற்பல் 6.37 மணிவரை

சதயம் காலை 6.37 மணிவரை
சுபநேரம்- 12.06-1.36 மணிவரை
இராகுகாலம்- 7.36-9.06மணிவரை

சந்திராஷ்டமம் - ஆயிலியம்.

வளவன்

**மேஷம்** எதிர் காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**கடகம்** மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்து செல்வது நல்லது, உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், உடல் நலனில் கவனம் தேவை, பிரயாண பயமுண்டு.

**துலாம்** வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பிள்ளைகளின் கல்வி நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பூர்வ புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.

**மகரம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், நண்பர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**ரிஷபம்** அரசு வழிச் சலுகை கிடைக்கும் வாய்ப்புண்டு, புதிய முயற்சிகள் கைகூடும், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**சிம்மம்** புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், சொந்த பந்தங்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு.

**விருச்சிகம்** வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் காணும் நாள், வருமானம் திருப்தி தரும், பயணங்களால் பலனுண்டு, கௌரவமான நாள்.

**கும்பம்** ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை, போசன சுகமுண்டு.

**மிதுனம்** உங்கள் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாகப் பார்ப்பார்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கன்னி** கூட்டு முயற்ச்சிகள் வெற்றி தரும், நிலையான வருமானத்திற்கு வழி கிடைக்கும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், எதிரியாக இருந்தவர் மனம் மாறுவர்.

**தனுசு** அரசியல்செல்வாக்கு மேலோங்கும் நாள், பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும், உறவினர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, கௌரவமான நாள்.

**மீனம்** உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, பயணங்களால் தேக நலன்கள் பாதிக்கப்படலாம், வழிபாட்டால் வளர்ச்சி கூடும், சயன சுகக்குறைவான நாள்.

கடுமையான உழைப்பைத் தவிர வெற்றிக்கு வேறு வழியில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றத் தேர்தல் - 2024

## யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்டம்

## இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

# யார் இந்த சயந்தன்?



-கம்பவாரிதி ஜெயராஜ்

கேசவன் சயந்தன் எனது நீண்டநாள் நண்பர். அவரை இம்முறை தமிழரசுக் கட்சி வேட்பாளராகக் களமிறக்கியிருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். அவர் சென்றமுறையே வேட்பாளராக நிறுத்தப்படவேண்டியவர் என்பது பலருடைய கருத்தாக இருந்திருக்கின்றது. அத்துடன் அவர்தான் தேர்ந்தெடுக்கப்படுவார் என்கிற எதிர்பார்ப்பும் இருந்திருக்கின்றது. ஆனால் சிலபேருடைய தலையீடுகளால் அந்த வாய்ப்பை இழந்திருக்கிறார் என்பதைக் கேள்விப்பட்டு நான் கவலைப்பட்டுமிருக்கின்றேன்.

சமூகத்தோடு இணைந்து வாழு கின்ற இளையவர்கள் இன்றைக்கு குறைந்து விட்டார்கள். அதுவொரு பெரிய குறைபாடு. சமூகத்தினுடைய நன்மை தீமைகளில் அதில் தாங்களும் கலந்துகொண்டு, அதில் ஈடுபட்டு, செயற்படுகின்ற இளையோர் தொகை இன்றைக்கு மிகக் குறைவாகிவிட்டது. இன்றைக்கு அரசியல் கட்சிகளில் இருக்கின்ற தலைவர்கள், தொண்டர்கள் என அனைவரிடத்திலும் சமூகச் செயற்பாடென்பது பூச்சியமாகத்தான் இருந்துவருகின்றது. நாங்கள் ஆண்டுதோறும் முத்தமிழுக்கும் விழாக்கள் யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் எடுத்துவருகின்றோம். யாழ்ப்பாணத்திலோ, கொழும்பிலோ தமிழுக்காகத் தமிழர்கள் அனைவரும் பெரும்பான்மையாகக் கூடுகின்ற பெருவிழாக்கள் இதுவாகும். அப்படியான தமிழுக்கான பெருவிழாவில் கூட நம்முடைய கட்சித்தலைவர்கள் பல பேரைக் காணமுடிவதில்லை. இதுவொரு பெரிய குறைபாடு என்றே நினைக்கிறேன். அமிர்தலிங்கம் போன்ற கூட்டணித்தலைவர்கள் வாழ்ந்த காலத்தில் நான் பார்த்து ரசித்த ஒரு விசயம், அவர்கள் வாழுகின்ற ஊர்களிலே திருமண வீடோ அல்லது மரணச் சடங்கோ இடம்பெற்றால் அத்தலைவர்கள் கட்டயாமாக அங்கே பிரசன்னமாகியிருப்பார்கள். மரணச்சடங்குகளில் கலந்துகொள்ளும் தலைவர்கள், அந்தச் சடலம் மயானத்திற்குப் போகும்வரைக்கும் அவர்களும் இறுதி ஊர்வலத்தோடு நடந்து போவதை நான் பார்த்திருக்கின்றேன். இன்றைக்கு அந்த நிலமை இல்லை. எல்லோரும் உப்பரிகையில் இருந்துகொண்டு தலைவர்களாகப் பார்க்கிறார்கள். கேசவன் சயந்தன் அதிலிருந்து விதிவிலக்கானவர் என்பது என்னுடைய கருத்து.

எல்லோருடைய இன்ப துன்ப நிகழ்வுகளிலும் சயந்தனுடைய பங்களிப்பு இருக்கும். அல்லது அந்த நிகழ்வுகளில் அவர் கலந்துகொண்டிருக்கிறார் என்கிற செய்தியை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அந்த ஊரோடு தொடர்பிருக்கின்றபடியால் நானறிந்த செய்தி இது. கம்பன்கழகம் என்கிற வகையில், கம்பன் கழகம் நடத்துகின்ற எல்லா விழாக்களிலும் சயந்தனுடைய பங்களிப்பு இருந்திருக்கின்றது. நான் அந்தப் பங்களிப்புக்காக இதைப் பேசுகின்றேன் என்று நினைக்காதீர்கள். சந்தர்ப்பம் கிடைத்துள்ளமையால், நன்றியுடைமையோடு அதனைச் சொல்லத் தலைப்படுகின்றேன். நாங்கள் விழாக்கள் நடத்தப் பொருளாதார ரீதியில் கஸ்ரப்படும்போதெல்லாம் அவர் கைகொடுத்திருக்கிறார். அது மட்டுமல்ல, எங்களுடைய எல்லா விழாக்களிலும் அவருடைய பிரசன்னத்தை நான் பார்த்திருக்கிறேன். தனக்கொரு முக்கியத்துவத்தைத் தேடாது, விழா அரங்கின் ஓர் ஓரத்தில் அமர்ந்திருந்து, விழாவின் பேசுபோருளைக் கேட்டுப்போகும் தன்மையினைப் பார்த்திருக்கிறேன்.

இன்றைக்கு, பெரும்பான்மையான கட்சிகளிலும் இப்படியான இளையோர்கள் இல்லாமல்தான் இருக்கிறார்கள். தேர்தல் என்றால்தான் அவர்களை முகம்காணக் கூடியதாக இருக்கின்றது. கேசவன் சயந்தனைப் பொருத்தவரையில், அந்தத் தகுதியைப் பார்த்து நான் மகிழ்ந்திருக்கிறேன். மக்களோடு மக்களாக வாழுகின்ற, ஓர் இனத்தின் பிரதிநிதியாக செயற்படுகின்ற அந்தத் தன்மை எனக்கு மிகவும் பிடிக்கும்.

அரசியலில், இம்முறை அவருக்கு இந்த வாய்ப்புக் கொடுக்கப்பட்டமைக்குரிய நியாயம் என்னவென்றால், நான் ஓர் அறைக்குள்ளே இருந்துகொண்டு உலகத்தைப் பார்க்கின்றவன். அதனாலே சொல்கிறேன். இன்றைக்கு பரந்துவிரிந்துவிட்ட ஊடகத் தளங்களில், கேசவன் சயந்தனுடைய நேர்காணல்களைப் பார்க்கிறேன். தலைவர் எனச் சொல்கின்றவர்களுக்கு அந்தப் நேர்காணல்களுக்கு முகங்கொடுக்கத் தெரியவில்லை. நம்முடைய திருவள்ளுவர் திருக்குறளிலே, பொருட்பால் என்று அரசியல் பற்றி பேசுகின்ற இடத்திலே, மந்திரிக்கு முதல் அதிகாரமாக சொல்வண்மையை வைக்கிறார். வார்த்தை வண்மையைப் பயன்படுத்தத் தெரிந்தவனால்தான் அரசியலில் நிமிர்ந்து நிற்க முடியும் என்று திருவள்ளுவர் சொல்லுகின்றார். அந்தவகையில் நான் இந்த நேர்காணல்களைப் பார்க்கும்போதெல்லாம் கவலைப்படுவேன். தலைவர்கள் பலர், நேர்காணல் என்று வந்துவிட்டு, கேள்விகளுக்கு முகங்கொடுக்க முடியாமல், சிந்திக்கின்ற எண்ணத்திற்கு பதில் கொடுக்க முடியாது வார்த்தைகளிலே குழம்புவார்கள். இப்படியான நிலையில், அடுத்தடுத்து கேசவன் சயந்தனுடைய இரண்டு, மூன்று நேர்காணல்களைப் பார்க்க முடிந்தது. அதனைப் பார்த்து நான் உண்மையிலேயே மகிழ்ந்தேன். இது தேர்தல் காலத்திலே நடந்த விடயமல்ல. இன்றைக்குப் சில காலத்திற்கு முன்னர் நான் பார்த்த அவரின் நேர்காணல் பற்றி குறிப்பிடுகின்றேன். சயந்தனுக்கே அதனைச் சொல்லிப் பாராட்டினேன். கேள்வியொன்றைக் கேட்டால் சரியான முறையிலே முகங்கொடுக்க அவருக்குத் தெரிகின்றது. தான் எடுத்துக்கொண்ட விடயத்தில் தெளிவாகவும், சுருக்கமாகவும் விபரிக்கின்ற அவரின் ஆற்றலைக் கண்டு நான் வியந்திருக்கின்றேன். இன்றைக்கு இத்தகைய இளந்தலைவர்கள் நமக்குத் தேவை. பாராளுமன்றத்திலும் சரி, வெளியிலும் சரி பேசுகின்ற தலைவர்களின் பேச்சுத்தான் ஓர் இனத்தினுடைய கருத்தாக ஏற்றுக்கொள்ளப்படும். ஆகவே ஓர் இனத்தினுடைய பிரதிநிதிகளாக இருக்கின்றவர்கள் பேசுகின்ற தகுதி பெற்றிருக்க வேண்டும். தான் நினைத்த கருத்தை சொல்லத் தெரிந்திருக்கவேண்டும். வெறுமனே வார்த்தைகளை சொல்லாமல், அது அவர்களுடைய உணர்வுசார்ந்த விசயமாகவும் இருக்க வேண்டும். சயந்தனைப் பொருத்தவரையில், மக்களோடு மக்களாக வாழ்ந்ததோ என்னவோ தெரியவில்லை, நம் இனப்பற்றிய உணர்வு அவரிடம் நிறைய இருக்கின்றது. அந்த உணர்வைத் தெளிவாக வெளிப்படுத்துகின்ற ஆற்றல் அவரிடம் இருக்கின்றது. மக்களுடைய இன்பதுன்பங்களில் கலந்துகொள்கின்ற அந்த மனப்பாங்கு இருக்கின்றது. இவையெல்லாம் இருக்கிறவர்கள் இன்றைக்கு மிகக்குறைவானவர்களாகத்தான் இருக்கிறார்கள். விரல்விட்டு எண்ணக் கூடியவர்களாகத்தான் இருக்கிறார்கள். அதனால் தான் சொல்கிறேன், இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக அவருக்கு தமிழரசுக் கட்சி கொடுத்திருக்கும் வாய்ப்பு மிகப்பொருத்தமானது என்றே கருதுகின்றேன். அவர் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவரின் ஆற்றல் மேலும் ஒளிர்விடும் என நான் நம்பிக்கை கொள்கின்றேன். ஆகவே நம் இனம்சார்பாக சொல்கிறேன், அனைத்து மக்களும் அவருக்கு ஆதரவளித்து அவரை வெற்றிபெறச் செய்யவேண்டும் எனத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.





கேசவன் சயந்தன் கடந்த சில வருடங்களாக எனக்கு நன்கு அறிமுகமானவர். மிகவும் ஆர்வத்தோடு, பற்றுறுதியோடு செயலாற்றக் கூடியவர். தமிழரினுடைய நிலவுரிமைகள், வழிபாட்டு உரிமைகள், இந்துக் கோயில்களினுடைய உரிமைகள் முதலியவற்றுக்கு எதிராகத் திணைக்களங்களைச் சார்ந்த அதிகாரிகள் நாசிசப் பாங்கி லான நடவடிக்கைகளை மேற்கொண்டபொழுது, பல நூற்றுக் கணக்கான வழக்குகளிலே ஜனாதிபதி சட்டத்தரணி திரு.சுமந்திரனோடு கூடியி ணைந்து நீதிமன்றங்களில் வாதாடி வெற்றிபெற்று, அந்த உரிமைகளை மக்களுக்கு வென்று கொடுப்பதில் இவருடைய பங்கு கணிசமானதாகும். அது எல்லோரதும் பாராட்டுதலுக்குரியது. இதனை நீங்கள் மனதிற்கொண்டு, எதிர்காலத்திலும் இவ்வாறான பணிகளில் அவர் ஈடுபடுவதற்கு அவரைப் பயன்படுத்த வேண்டு மானால், அவருக்கு அமோகமான ஆதரவினை வழங்க வேண்டும். தமிழ் தேசிய அரசியலுக்கு தேவையான விடயங்களில் ஒன்று நேர்மை. இரண்டாவது தமிழ் சமுதாயத்தின் மீது கொண்டுள்ள பற்று. மூன்றாவது சேவை புரிகின்ற ஆர்வம். இந்த மூன்று பண்புளும் கேசவன் சயந்தனிடம் தாராளமாக இருக்கின்றன.

**- பேராசிரியர். சி.பத்மநாதன்**



நான் முன்னாள் போராளியாக இருந்தேன். எங்களைப் பூசா தடுப்பு முகாமில் தடுத்து வைத்திருந்தனர். அதில் ஆயிரக்கணக்காணவர்களை விடுதலை செய்து கொழும்பு நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்றனர். கொழும்பு நீதி மன்றத்தில், எல்லோருக்கும் புனர்வாழ்வளிக்கவேண்டும் எனத் தெரிவித்து, எங்களுக்கு கைவிலங்கிட்டு, புனர்வாழ்வு நிலையங்களுக்கு கொண்டு செல்ல தயாரானபோது, அந்நேரத்தில் கேசவன் சயந்தன் அவர்கள்தான் தனியொருவராக வருகைதந்து, எங்களுக்காக வாதாடினார். அவ்விடத்திலிருந்து 600இற்கும் மேற்பட்ட முன்னாள் போராளிகள் உடனடியாக விடுவிக்கப்படுவதற்காக கேசவன் சயந்தன் அவர்களே வாதாடினார். அவரின் சட்ட உதவியினால் அன்றையதினமே விடுதலைப் புலிகள் அமைப்பில் கலைசார்ந்த பணிகளில் ஈடுபட்டிருந்த 600இற்கும் மேற்பட்ட முன்னாள் போராளிகள் விடுவிக்கப்பட்டோம். இதற்காக நாம் என்றைக்கும் நன்றிக் கடன்பட்டவர்களாகவுள்ளோம். அன்றைய நாளில் போகுமிடம் தெரியாது தத்தளித்துக் கொண்டிருந்தோம். அந்நேரத்தில் எங்களுடன் வந்து கதைத்து, கை கொடுத்து உதவியர் கேசவன் சயந்தன் சட்டத்தரணி அவர்கள்தான். அதனை நாம் எப்போதும் மறக்கமாட்டோம். அன்றிலிருந்து இன்றுவரை என்ன உதவி வேண்டுமெனிலும், அவரைத்தான் நாடுகின்றோம். அவரும் முகஞ்சுழியாது எங்களுக்கான உதவிகளைப் புரிந்து வருகின்றார். ஆகவே இம்முறை இடம் பெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் இலங்கை தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் இலக்கம் மூன்றில் போட்டியிடும் கேசவன் சயந்தன் அவர் களுக்கே எமது ஆதரவினை வழங்குவோம்.

**-மாணிக்கம் சிறீஸ்கந்தராஜா, மந்துவில்**



திருக்கேதீச்சர ஆலய அலங்கார வளைவை உடைத்தமைக்கு எதிராக மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் வழக்கிலும், மன்னார் மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்று நிறைவுற்ற வழக்கிலும், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனும், சட்டத்தரணி கேசவன் சயந்தன் அவர்களும் முன்னிலையாகி வழக்காடி வருகின்றனர். இது சமய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் ஒரு செயலாகும். அதற்காக பாடுபட்டுவரும் இவர்கள் இருவருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**- திருமதி. அபிராமி கைலாசபிள்ளை**
**பிரதித் தலைவர், திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச் சபை**

(087)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களது உண்மையான மரியாதையை பிறர் உணரும் போதே, உங்கள் மீதும் அவர்கள் மரியாதையைப் பொழிவர். ~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எமது தேர்தல் முடிவுகள் பட்டறிவாக அமையும்

அரசியல் என்பது சாதாரணமான விடயமல்ல. கிடைத்த சந்தர்ப்பத்தை தக்கமுறையில் பயன்படுத்தத் தவறும்போது, தேர்தல் காலங்களில் பதறுகின்ற நிலைமையே ஏற்படும்.

அந்த உண்மை இன்று நம் தமிழர் பிரதேசத்தில் உணரப்பட்டுள்ளது.

வேட்பாளர்கள்; ஒருவர் மீது ஒருவர் மாறி மாறிக் குற்றம் சாட்டுகின்றனர்.

தமிழ் மக்களுக்காகத் தாம் செய்த பணிகள் என்ன என்பதைக் கூறுவதற்கு எதுவும் இல்லை என்பதாலேயே மற்றவர்கள் மீது குற்றம் சாட்டுகின்ற பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

தவிர, இப்போது எங்கள் தமிழர் தேசத்தில் பொதுத் தேர்தலும் அதற்கான பிரசாரங்களும் நகைப்புக்கும் நகைச்சுவைக்குமுரியதாக இருப்பதைக் காண முடிகிறது.

ஆம், ஆன கருத்துக்கள் எதுவும் இல்லை. இனி நாம் செய்ய வேண்டியவை எவை? என்ற திட்டங்களும் இல்லை.

ஆக, இப்போது நாம் பேசக்கூடிய ஒரேயொரு விடயம் மதுபானசாலைகளுக்கான அனுமதிப்பத்திரம் பற்றியதாகவே இருக்கிறது.

எப்படி எங்கள் நிலைமை ஆயிற்று என்று பார்த்தீர்களா?

ஒரு காலத்தில் தனித் தமிழீழம் பற்றி நம் அரசியல் தலைவர்கள் பேசினார்கள். அதைத் தமிழ் மக்கள் ஆமோதித்து வரவேற்றார்கள்.

தனித் தமிழீழம் என்று பேசிய தமிழ்த் தலைவர்களிடம் உள்ளொன்றும் புறமொன்றுமான கருத்து நிலை இருந்தது.

ஆனால் அவர்களின் உரைகளைச் செவிமடுத்த தமிழ் மக்கள் அதனைத் தங்கள் இதயங்களில் ஏற்றிப் பூசித்தனர்.

அதன் காரணமாகவே விடுதலைப் போராட்டம் இந்த மண்ணில் புத்துருவாகியது.

பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் மண் விடுதலைக்காகத் தங்கள் இன்னுயிரை ஆகுதியாக்கினர்.

இருந்தும் எங்களிடம் ஒரு பலமான ஒற்றுமை இல்லாததன் காரணமாக எல்லாத் தியாகங்களையும் செல்லுபடியற்றதாக்கி, எங்களின் இழப்புகளையும் அர்த்தமற்றதாக்கிவிட்டோம்.

இவற்றின் பிறகேனும் அரசியல் களத்தில் இறங்கியவர்கள் ஒரு பலமான அரசியல் தலைமையை உருவாக்கி இருக்க வேண்டும்.

இதற்கு மேலாக, தேர்தல் அரசியலுக்கு அப்பால் ஒரு பலமான மக்கள் இயக்கத்தை நிர்மாணித்திருக்க வேண்டும்.

ஆனால் அவை பற்றிச் சிந்திக்காத எங்கள் அரசியல் தலைவர்கள் தங்களின் சுயநலம் பற்றியே சதா சிந்தித்தனர்.

இதன் விளைவாக 2024இல் நடைபெறுகின்ற பொதுத் தேர்தலில் எங்கள் தமிழர் தேசத்தில் எண்ணிறந்த வேட்பாளர்கள் களமிறங்கும் சூழ்நிலை உருவாயிற்று.

என் செய்வது எங்கள் அரசியல் தரப்புகள் விட்ட தவறு தமிழ் அரசியலை வெறுமையாக்கிவிட, அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்காகப் பலரும் களமிறங்குவது தவிர்க்க முடியாததாயிற்று.

ஆக, விட்ட தவறுகள் இனி தண்டனையாக ~ கற்றுக் கொண்ட பாடமாக அமையப் போகிறது.

ஆம், 2024 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல் முடிவுகள் நம் தமிழர் தேசத்தக்கு ஒரு பெரும் பட்டறிவாக அமையும்.

அந்தப் பட்டறிவு பலரை அரசியலில் இருந்து வெளியேற்றும். இன்னும் பலரை பகை கொண்ட உள்ளங்களாக ஆக்கும்.

பரவாயில்லை எல்லாத் துன்பங்களையும் அனுபவித்த நாம் அதனையும் கண்டேகுவோம்.

இன்னும் மூன்று நாட்களில் தேர்தல்

# 50 ஆயிரம் வாக்காளர் அட்டைகள் தபாலகங்களில் தேக்கம்

(கொழும்பு)

பொதுத் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் அஞ்சல் மூலம் விநியோகிக்கப்பட்டுள்ள நிலையில், இதுவரையில் சில பகுதிகளுக்கு வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படாமல் உள்ளதாக அஞ்சல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி 50 ஆயிரம் வாக்காளர் அட்டைகள் அஞ்சல் நிலையங்களில் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஒக்டோபர் மாதம் 27ஆம் திகதி முதல் இந்த மாதம் 07ஆம் திகதி வரை உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் வாக்காளர்களின் வீடுகளுக்கு அஞ்சல் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்டன.

இந்தநிலையில் இதுவரை வாக்காளர் அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள் அருகிலுள்ள அஞ்சல் திணைக்களத்துக்குச் சென்று பெற்றுக்கொள்ளுமாறு பிரதி அஞ்சல்மா அதிபர் ராஜித கே.ரணசிங்க தெரிவித்துள்ளார். பொதுத் தேர்தலுக்கு இன்னும் 03 நாட்களே உள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (ந-7)

## அநுரவுக்கு ஏற்ற பாராளுமன்றம் அமைவது அவசியம் - பிரதமர்

(ஹோமாகம)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் சித்தாந்தத்திற்கு ஏற்ற பாராளுமன்றம் இந்த பொதுத் தேர்தலில் உருவாக்கப்பட வேண்டுமென பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

ஹோமாகமவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

நவம்பர் 14ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பிரதிநிதித்துவப்படுத்தும் சித்தாந்தத்துக்கும் அரசியல் மாற்றத்துக்கும் பொருத்தமானவர்கள் ஒன்றிணைந்து பாராளுமன்றத்தை உருவாக்க வேண்டும்.

நாட்டுக்குப் பொருத்தமான வரவு செலவுத் திட்டத்தை முன் வைத்து புதிய அரசாங்கத்தில் அதன் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மக்கள் குழுவொன்று தேவை.

மேலும், எங்களின் பாராளுமன்ற வெற்றி எண்ணிக்கையில் மட்டுமல்ல, தரத்திலும் உள்ளது திருடர்களைப் பாராளுமன்றத்திற்கு அனுப்புவதன் மூலம் நாட்டில் மாற்றத்தை எதிர்பார்க்க முடியாது.

பாராளுமன்றத்தை நினைவுபடுத்தும் போது இதுவரையில் இருந்த அருவருப்பான கருத்தை மக்களாலேயே மாற்ற முடியும் என பிரதமர் மேலும் தெரிவித்தார். (ந-7)

## பாதுகாப்பு அமைச்சின் செயலர் அறுகம்பேக்கு கள விஜயம்

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வுபெற்ற எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தா அறுகம்பே பகுதிக்கு கள ஆய்வு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

அண்மையில், அறுகம்பே பகுதியிலுள்ள பல சுற்றுலாத் தளங்களில், இஸ்ரேலியர்களைக் குறிவைத்து பயங்கரவாத தாக்குதல்கள் நடத்துவதற்கான திட்டம் குறித்த தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதனையடுத்து, முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளையடுத்து, குறித்த தாக்குதல் திட்டம் தொடர்பில் பலர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

அதேநேரம், தாக்குதல் தொடர்பில் தங்களுக்கு நம்பகமான தகவல் கிடைத்துள்ளதால், அமெரிக்க உள்ளிட்ட சில நாடுகள், அறுகம்பே பகுதிக்குச் செல்வதைத் தவிர்க்குமாறு தங்கள் பிரஜைகளை முன்னதாக அறிவுறுத்தியிருந்தது.

இவ்வாறானதொரு பின்னணியில் பாதுகாப்பு செயலாளர், அறுகம்பே பகுதிக்கு கள ஆய்வு விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார். (ந-7)

**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை 01 - 30, 2024**

**"நீங்கள் வலிமை,பொறுமை ஆகியவற்றின் அருமையை உணர்வீர்களாயின் மரங்களின் சகவாசத்தை வரவேற்பீர்கள்."**

-ஹால் போர்லாண்ட்
(அமெரிக்க இயற்கையியலாளர்)

## அவசியமானதை அநுர பேசுவதில்லை - ரணில்

(கொழும்பு)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அவசியமான பிரச்சினைகள் குறித்து பேசுவதில்லை என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் வேட்பாளர்களுக்கு ஆதரவு தெரிவித்து முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்ட பிரசாரக் கூட்டம் நேற்று கொட்டகலை சீ.எல்.எப்.வளாகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைக்கையிலே முன்னாள் ஜனாதிபதி ரணில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

1978 ஆம் ஆண்டு முதல் சௌமிய மூர்த்தி தொண்டமானுடன் இணைந்து பெருந்தோட்டப் பகுதிகளில் பல்வேறு அபிவிருத்திகளை முன்னெடுப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது.

அவ்வாறே இன்றும் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

அதற்கமைய, பெருந்தோட்ட மக்களுக்குக் காணி உரிமைகளை வழங்கி வீடுகளை அமைப்பதற்குத் திட்டமிட்டிருந்தோம்.

இருப்பினும், அதற்கான சாத்தியப்பாடுகள் இல்லாது போயுள்ளது. தற்போது ஜனாதிபதி அவசியமான பிரச்சினைகள் குறித்துப் பேசுவதில்லை என்றார். (ந-7)

## 23 இந்திய மீனவர்கள் நெடுந்தீவில் கைது

(நெடுந்தீவு)

யாழ்ப்பாணம் - நெடுந்தீவை அண்மித்த கடற்பகுதியில் அத்துமீறிக் கடற்றொழிலில் ஈடுபட்ட 23 இந்திய கடற்றொழிலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த கைது நடவடிக்கையானது கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த கடற்படையினரால் நேற்று காலை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது, 3 கடற்றொழில் படகுகள் கைப்பற்றப்பட்டதாக கடற்படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட இந்திய கடற்றொழிலாளர்கள் காங்கேசன்துறை கடற்றொழில் துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்டு,

மேலதிக விசாரணைகளுக்காக மயிலிட்டி கடற்றொழில் பரிசோதகர் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ந-7)

## இன்றுடன் ஓய்கிறது தேர்தல் பிரசார அலை

பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான பிரசார நடவடிக்கைகள் இன்று திங்கட்கிழமை நள்ளிரவுடன் நிறைவடையவுள்ளது.

பிரசார நடவடிக்கைகள் நிறைவடைந்ததன் பின்னர் நாளைய தினத்திற்குள் தேர்தல் பிரசார அலுவலகங்கள் அகற்றப்பட வேண்டுமென தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்துள்ள அவர்,

தற்போது, வேட்பாளர்கள் தேர்தல் பிரசாரத்திற்காக அலுவலகங்களை அமைத்துள்ளனர்.

அந்த அலுவலகங்களில் தொகுதி அளவில் இயங்கும் அனைத்து அலுவலகங்களையும் நாளை நள்ளிரவுக்கு முன்பாக அகற்றப்பட வேண்டும்.

நள்ளிரவு 12.00 மணிக்குப் பிறகு கட்சிகள் மற்றும் சுயேட்சை குழுக்கள் ஒரு தொகுதியில் ஒரு தேர்தல் அலுவலகத்தை மாத்திரமே வைத்திருக்க முடியும்.

அத்துடன் வேட்பாளரின் வீட்டை அலுவலகமாகப் பராமரிக்கலாம்.

ஆனால், அந்த அலுவலகங்களில் எதுவும் அலங்கரிக்கவோ அல்லது வேறு எந்த பிரசார பணிகளைச் செய்யவோ முடியாது என்றார். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்ற தேர்தல் - 2024

# ஸ்ரீ லங்கா தொழிலாளர் கட்சி

## வன்னித் தேர்தல் மாவட்டம்

# தி.இடபாருடன்

(மல்லாவி பிள்ளையார் ஸ்ரோர்ஸ்
உரிமையாளர்)





எங்கள் வன்னி
எங்கள் மக்களுக்கு!

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 (X) | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |

(C-215)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேட்பாளர்கள் தொடர்பில் வாக்காளர்கள் ஆராய வேண்டும்

## பஃப்ரல் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் எதிர்வரும் 14ஆம் திகதி இடம்பெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலுக்கு இன்னும் இருப்பது மூன்று நாட்கள் மாத்திரமே.

அதன்படி, வாக்குகளை வழங்கவுள்ள வாக்காளர்கள், தேர்தல் வேட்பாளர்கள் தொடர்பில் குறிப்பிட்ட நாட்களில் ஆராய வேண்டும் என பஃப்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

வரப்பிரசாதங்கள் அல்லது தற்காலிக சலுகைகள் தொடர்பில் சிந்திக்காது பொருத்தமான நபர்களை பாராளுமன்றத்திற்கு அனுப்பும் நோக்கில் வாக்காளர்கள் செயற்பட வேண்டும் என பஃப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி கூறியுள்ளார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அவர், இம்முறை இடம்பெறவுள்ள பாராளுமன்றத் தேர்தல் தீர்மானமிக்க ஒன்றாகும்.

பொருளாதார நெருக்கடி, காலிமுகத்திடல் போராட்டம் ஆகியவற்றுக்கு பின்னர் இடம்பெறும் முதலாவது பாராளுமன்றத் தேர்தல் இதுவாகும்.

ஆகவே, பொருத்தமானவர்களை பாராளுமன்றத்திற்கு அனுப்ப வாக்காளர்கள் முன்வர வேண்டும். குறிப்பிட்ட சில நாட்களில் வேட்பாளர்கள் தொடர்பில் வாக்காளர்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என நாம் எதிர்பார்க்கிறோம் எனத் தெரிவித்தார்.(ந-7)

# இனவாதம் நாட்டிலிருந்து ஒழிக்கப்பட வேண்டும்

## திலித் ஜயவீர தெரிவிப்பு

நாட்டில் இனவாதம் மீண்டும் ஏற்பட இடமளிக்கக் கூடாது எனவும் வெறுப்பு, கோபம் அற்ற அரசியலை நாடு கொண்டிருக்க வேண்டிய காலம் வந்துள்ளதாக சர்வஜன அதிகாரத்தின் தலைவரும் கம்பஹா மாவட்ட வேட்பாளருமான திலித் ஜயவீர தெரிவித்துள்ளார்.

அம்பலாந்தோட்டை பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

மேலும் எமது மதத்தையோ, தர்மத்தையோ, நாகரிகத்தையோ நாடாத இனவாத விதை இந்த நாட்டில் துளிர்விட்டால், உடனடியாக அதை நசுக்கி, இந்த நாட்டிலிருந்து இனவாதத்தை ஒழிக்க வேண்டும்.

அதேநேரம் வடக்கிற்குச் சென்று தெற்கில் இன்னொன்றைப் பேசும்தற்போதைய அரசியலுக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும்.

மாறாக, நமது அன்பான அரசியலை மண்ணில் விதைக்க வேண்டும்.

அரசியலில், வெறுப்பு மற்றும் கோபத்திலிருந்து விடுபட்ட நாம் அனைவரும் இணைந்து ஒரு வேலையைச் செய்ய விரும்புகிறோம்.

ஆனால் ஒன்றை நாம் ஒத்துக் கொள்ள வேண்டும். இந்த நாட்டின் அப்பாவி மக்களின் வாக்குகளால் இவர்கள் அனைவரும் பதவிகளுக்கு செல்கின்றனர்.

அந்த மக்களுக்கு என்ன நடந்தது என்று பார்க்காத, அந்த மக்களின் வாழ்க்கையை பார்க்காத அரசியல் முடிவுக்கு வர வேண்டும் என்றார்.(ந-7)

## தெல்லிப்பழையில் வாகன விபத்து

தெல்லிப்பழையில் நேற்று காரும் பிக்கப் ரக வாகனமொன்றும் விபத்துக்குள்ளாகியுள்ளது.

தெல்லிப்பழைச் சந்திக்கும் தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோவிலுக்கும் இடைப்பட்ட பகுதியிலேயே குறித்த விபத்து சம்பவித்துள்ளது.

இதில் இரு வாகனங்களும் பலத்த சேதம் அடைந்ததோடு மின் கம்பங்களும் சேதமடைந்துள்ளது.

விபத்தில் படுகாயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனமதிக்கப்பட்டுள்ளதோடு சம்பவ இடத்துக்கு விரைந்த தெல்லிப்பழைப் பொலிஸார் போக்குவரத்தை சீர்செய்வதற்கான நடவடிக்கையை முன்னெடுத்தனர். (ந-7)

## கைதிகளை...

தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசாரத்துக்காக நேற்று மாலை யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, பாசையூரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றினார்.

ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் பங்கேற்றிருந்த இக்கூட்டத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்த நாட்டுக்கு புதிய அரசியலமைப்புத் தேவைப்படுகிறது. இல்லை என்றால், இந்த நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த முடியாது.

முதலில் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவோம். அதன்மூலம் எதிர்காலச் சந்ததியினர் யுத்தம் செய்யாத நாட்டை உருவாக்க வேண்டும்.

வடபகுதி மக்களுக்கு எமது ஆட்சியில் நம்பிக்கை உண்டு. முதலில் நீங்கள் சுதந்திரமாக வழக்கூடிய சூழ்நிலையை வட மாகாணத்தில் ஏற்படுத்திக் கொடுப்போம்.

உங்களின் பராம்பரியக் காணிகள் அரசாங்கத்தினால் பெறுப்பேற்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் எமக்குக் கவலை உள்ளது. படிப்படியாக அந்தக் காணிகளை உங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுப்போம். அரசியல் கைதிகளையும் விடுவிப்போம். கிராமிய வறுமையை ஒழிப்போம். விவசாயத்தை மேம்படுத்துவோம். அதற்காக உரமானியத்தை 15 ஆயிரம் ரூபாயில் இருந்து 25 ஆயிரம் ரூபாயாக அதிகரித்துள்ளோம்.

எமது கடலில் எமது மீனவர்கள் மீன்பிடிப்பதற்கான உரிமையை நாம் உறுதிப்படுத்துவோம். எவரும் அதை அழிப்பதற்கு இடமளிக்க மாட்டோம்.

யுத்தத்துக்குப் பின்னர் வட பகுதி போதைப் பொருளில் சிக்கியுள்ளது. இங்கு கேரள கஞ்சா வியாபித்துள்ளது.

யாழ்ப்பாணத்து இளைஞர்கள் இதில் சிக்கி வருகின்றனர். நான் உங்களுக்கு உறுதிமொழி தருகின்றேன். யாழ்ப்பாணத்தையும் இந்த நாட்டையும் போதைப் பொருளிலிருந்து மீட்போம்.

எமது நாட்டின் போதைப்பொருள் வர்த்தகத்தில் அரசியல்வாதிகள் ஈடுபட்டுள்ளனர். இதை இல்லாதொழிக்க வேண்டும்.

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்தை மீள இயக்குவோம். சீமெந்துத் தொழிற்சாலையையும் மீள ஆரம்பிப்போம் என்றார். (ந-7,33)

மஹஜன சம்பத
திகதி 2024.11.10
சீட்டிழுப்பு இலக்கம் 5652
ஆங்கில எழுத்து M வெற்றி இலக்கங்கள் 3 0 9 6 1 9
அத சம்பத
ஆங்கில எழுத்து M வெற்றி இலக்கங்கள் 9 6 1 9
சீட்டிழுப்பு இலக்கம் 227
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.11.10
சீட்டிழுப்பு இலக்கம் - 1682
S 22 25 36 57 S
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
Double Chance இலக்கம் 86504
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324

மெகா பவர்
திகதி 10/11/2024
சீட்டிழுப்பு இலக்கம் 2000
வெற்றி எழுத்து சுப்பர் இலக்க வெற்றி இலக்கங்கள்
Z 17 09 23 56 61
Double Chance 156733
தொலைபேசி 0112-470662, 0114-607000 இணையம் www.nlb.lk

லக்கி 7 VIP
திகதி 2024.11.10
சீட்டிழுப்பு இலக்கம் 0478
W 9 5 6 9 8 2 W
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3894
சீட்டிழுப்பு திகதி 10.11.2024
ஆங்கில எழுத்து T வெற்றி இலக்கங்கள் 03 17 48 78
T 038909
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.11.10
சீட்டிழுப்பு இலக்கம் 961
வெற்றி இலக்கங்கள்
ரிஷபம் 01 23 33 53 ரிஷபம்
தன யோக இலக்கம் 173521 தேசிய லொத்தர் சபை நாளுக்கான விதி எண் 36

உத்தியோகபூர்வ முடிவுகள்
10.11.2024 வெற்றி வாரம் 360
ஆங்கில எழுத்து S மற்றும் வெற்றி இலக்கம் 0 1 5 7 6 5
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.25,346,436.00
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2626 வர்ணம்
சீட்டிழுப்பு திகதி 2024.11.10 தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 03 06 54 65 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 67,907,687.20
அபிவிருத்தி லொத்தர் சபை

சனிதா
திகதி 10.11.2024 வெற்றி வாரம் 4787 வர்ணம்
வெற்றி இலக்கங்கள் 23 48 59 72 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,880,824.40
செகன்ட் சான்ஸ் விசேட இல. ரூ.100,000/- பணப்பரிசு
அபிவிருத்தி லொத்தர் சபை www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
வெற்றி வாரம் 555
சீட்டிழுப்பு திகதி 10.11.2024
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 05 | 09 | 33
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00
அபிவிருத்தி லொத்தர் சபை www.dlb.lk

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4338 வர்ணம்
சீட்டிழுப்பு திகதி 10.11.2024 தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 16 36 45 58 கடகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,647,190.40
அபிவிருத்தி லொத்தர் சபை

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
D 31 27 42 63 71
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1802
திகதி 10.11.2024 ஞாயிற்றுக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.555,035,296.00
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம் : 2452
வர்ணம் :
சீட்டிழுப்பு திகதி : 2024.11.10
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.81,327,078.40
வெற்றி இலக்கங்கள் 12 49 60 76 G
ரூ.100,000/- பணப் பரிசுகளுக்கான விசேட இலக்கங்கள்
அபிவிருத்தி லொத்தர் சபை www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றத் தேர்தல் - 2024

(யாழ். கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்)

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்
(தமிழ் தேசிய மக்கள் முன்னணி)












இரு தேசம் ஒரு நாடு இலக்கினை அடைய
ஒற்றைத் தலைமையில் ஓரணிய ாவோம்!

தாயகம் - தேசியம் - சுயநிர்ணயம்

(C-158)



V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை வீசா நீடிப்பு
(C-1563)



யாழ்ப்பாணம் - சென்னை
விமான சேவைகள்
யாழ் - சென்னை விமானப்
பயணச் சீட்டுக்கள்
38,500/= இலிருந்து விசேட விலையில்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
மற்றும் அனைத்து நாடுகளுக்குமான
ரிக்கற்றுக்களை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
(532)
APEX TRAVELS
0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்க அருகில்)


## மின் கட்டணக் குறைப்பு
# மீண்டும் கால அவகாசம் கோரியது மின்சார சபை

(கொழும்பு)

மின்சாரக் கட்டணக் குறைப்பு தொடர்பான புதிய பிரேரணையை வழங்க பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் மேலும் 15 நாட்கள் கால அவகாசம் கோரப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

தரவுகளைப் பகுப்பாய்வு செய்து மேலதிக கணக்கீடுகள் செய்யப்பட உள்ளதாகவும்

இதன்காரணமாகவே இவ்வாறு கால அவகாசம் கோரியதாகவும் இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது. (ந-7)


## பணியாளர் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கி வரும் உணவகம் ஒன்றுக்கு
கொத்து றொட்டி போடுதல், பிறைட்றைஸ்
தயாரித்தல், றொட்டி வேலை செய்தல், உணவு
பரிமாறுதல் போன்ற வேலைகளில்
அனுபவம் வாய்ந்த பணியாளர் தேவை.
(C-1560)
077 649 1027, 076 912 8399



வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-1562)
076 825 7716 (ஆகாஸ்)



# அன்பார்ந்த தமிழ் சமூகமே
# உங்கள் பெறுமதியான வாக்கை
# தமிழ் அரசுக் கட்சிக்கு வழங்கிடுவீர்!





X

(039)

# இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

தமிழ் அரசுக் கட்சி எங்கள் சொத்து அதனையே நாம் தெரிவு செய்வோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.11.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.